


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.   www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 22ம் நாள் நிறைமதி நாள் (05-04-2023 புதன்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## காரைக்கால் அம்மையார் குருபூசை



பங்குனித் திங்கள் 25ம் நாள் (08-04-2023) சனிக் கிழமை சுவாதி நாண் மீனும் கூடிய நன்னாளில் அன்று காரைக்கால் அம் மையார் குருபூசை இடம் பெறும்.

# ஆடு தலையாக வரும் இளவேனில் சித்திரையே தமிழர் புத்தாண்டு

# இம்முறை மங்கலம் ஆண்டு மாலை 2.03 மணிக்கு பிறக்கிறது




இளவேனில் சித்திரையே பண்டைத்தமிழர் புத்தாண்டு ஆகும். இம்முறை மங்கலம் (சோபகிருது) ஆண்டு சித்திரை முதல்நாள் அதாவது 14ம் திகதி (14-04-2023) வெள்ளிக்கிழமை இலங்கை இந்திய நேரப்படி மாலை 2.03 மணிக்குப் பிறக்கிறது. இது சித்திரைத் திங்கள் தேய்பிறை தொண்மைப் பிறைநாளும் (நவமி) முக்கோல் நாண்மீன் / திருவோணம் இரண்டாம் பாத நன்னாளாகும். அன்று முற்பகல் 10.03 மணியிலிருந்து பிற்பகல் 6.03 மணிவரை புண்ணியகாலமாகும்.



தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்” சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் புத்தாண்டாக கொண் டாடப்படுகிறது. சித்திரைத் திங்களே பழந்தமிழரின் புத்தாண்டு என்பதை நெடுநல்வாடை சிறப்பாக எடுத்துரைக்கிறது. ”திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலம் ” என விளக்கியுள்ளார் நக்கீரர் அவர்கள். இங்கு ஆடு தலையாக என்பது , மேழம் தான் ஓரையில் முதலாவது மற்றும் தலையானது. அதுவே ஆண்டின் பிறப்பாகும் என்பதாகும்.

தை தான் தமிழர் புத்தாண்டு என்பது, தமிழர்கள் புறக்கால வானியல் கணித அறிவியல், தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) அறிவியல் கணிப்பில் உருவான ஆண்டுப்பிறப்பல்ல. இந்தத் தைத் திங்கள் மாற்றத்திற்கான முடிவுகள், எந்தப் புறக்கால வானியல் கணித அறிவியல் பின்புலம் இல்லாது, (04ஆம் பக்கம் பார்க்க)

## ஆடல்வல்லானுக்கு ஆனையிறவில் இருபத்தேழு அடியில் சிலை

## சிறீதரன் ஐயா மற்றும் கரைச்சி பிரதேச சபையினருக்கு நன்றிகள்




முற்று முழுதாக தமிழர் மரபில் போற்றப்படும் ஆடல்வல்லான் ஆனையிறவில் எழுந்தருளி இருப்பது, சிவபூமியின் சிறப்புகளைப் பறைசாற்றும் ஒரு அற்புத முன்னெடுப்பு ஆகும். ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் தமிழர் அடையாளங்கள் மற்றும் அவர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்களாய் இன்றும் பார்க்கப்படுவது அவர்களின் கடவுள் சிலைகளே. குறிப்பாக சிவலிங்கம் தமிழர்களின் அடையாளங்களில் முதன்மையாகப் பார்க்கப்படுகிறது அத்துடன் அதை வைத்துத்தான் தமிழர் நிலங்கள் இன்றும் அடையாளப் படுத்தப்படுகிறது. அந்த வகையில் ஐந்தொழில்களைப் புரிபவனும், ஐம் பூதங்களை இயக்குபவனுமாகிய சிவனை ஆனையிறவில் இருபத்தேழு அடியில் அமைத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

இந்தச் சிலை மாசி 28ம் நாள் தேய்பிறை ஐம்மைப் பிறை நாளும், முறம் (விசாகம்) விண்மீனும் கொண்ட நன்னாளில் (12-03-2023), வணிக சுற்றுலா மையம், தட்டுவன்கொட்டி சந்தி ஆனையிறவில், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி.சிறீதரன் சிந்தனையில் மற்றும் கரைச்சி பிரதேச சபை கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்களின் பேராதரவுடன், புலம்பெயர் தமிழர்களின் நிதிப்பங்களிப்புடனும் நிறுவப்பட்டு கடவுள் மங்கல நன்னீராட்டு செய்யப்பட்டது. இந்த முன்னெடுப்பு பலதரப்பட்ட தமிழ் மக்களால் மிகவும் பகிரப்பட்டு பாராட்டப்பட்ட ஒன்றாகும்.

# தமிழ் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில் தாயாருக்கு ஒருநாள்

# சித்திரை நிறைமதி இம்முறை சித்திரை 22 (மே 5) வெள்ளிக்கிழமை



தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்” சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் தமிழர் புத்தாண்டாக கொண்டாடப் படுகிறது. இந்த சித்திரையில் வருகின்ற நிறைமதி நாளும் (சித்திரை பௌர்ணமி) பழந்தமிழர் வாழ்வியலில் இரண்டறக் கலந்த நாளாகும்.

தமிழர் புதுவருடமாகிய சித்திரைத் திங்களில் வரும் சித்திரை / அறுவை நாண்மீனும் (நட்சத் திரம்), முழுமதி / நிறைமதி சேர்ந்த தினமே, இந்த சித்திரை நிறைமதி நாளாகும். இந்நாளில் சூரியன் மேழம் நல்லோரையில் உச்சம் பெற்று நேர் எதிரில் சந்திரனின் சம உச்சவீடான துலாத்தில் சந்திரன் சித்திரை நாண்மீனில் (நட்சத்திரத்தில்) வருகின்ற நிறைமதிப் பிறைநாளே / திதியே, சித்திரை சிறப்பு நிறைமதி(பௌர்ணமி) நாளாகும்.

சித்திரையில் புத்தாண்டு மட்டுமல்ல, சித்திரைத் திங்களில் சித்திரை மீனோடு (நட்சத்திரத்தில்) மதியம் (முழுநிலா) சேரும் நாளும் சித்திரை நிறைமதி (பூரணை) என்று கொண்டாடப்படுகிறது. சித்திரா பூரணையைப் பெரு முறையில் தமிழர் கொண்டாடியதைச் சிலப்பதிகாரத்திலே பூம்புகார் நகரம் இந்திரவிழவூரெடுத்த காதையில் காண் கிறோம். “சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென வெற்றிவேல் மன்னர்க்கு உற்றதை ஒழிக்கென” (சிலப்பதிகாரம்:5:64-65) என்கிறது. “சித்திரை மாதத்துச் சித்திரை மீன் மதியத்தைச் சேர்ந்தது என்று வெற்றிவேல் மன்னனுக்கு நேர்ந்த இடுக்கணை ஒழிப்பதற்கென என்று ஊரார் விழாவெடுத்தைச் சொல்கிறது சிலம்பு. அங்கே ஊரின் முதுகுடிப் பெண்டிர் “பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென” (சிலம்பு: 5: 72-73) என்று பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் சுரக்க வாழ்த்துவதையும் காண்கிறோம். சித்திரை வழிபாட்டுத் திங்களாகவே தமிழர் மார்பில் இருந்து வந்ததை மேலே உள்ள தரவின் படி அறிந்துகொள்ளலாம்.

உலகின் பிற பகுதிகளில் உலக தாய்மார் தினம் கொண்டாடப்படுகிறது அனால் தமிழர் மரபில் வாழும்போது அன்புக்கடலாகவும், வாழ்ந்தபின்னும் சித்திரை நிறைமதியன்று குலதெய்வ நாளாகவும் கொண்டாடப்படுவது தமிழரின் பண்பாட்டு நீட்சியை பறைசாற்று கிறது.

# அளவெட்டி அருள்மிகு சுப்பிரமணிய ஆச்சிரமக்கோயில் குடமுழுக்கு



அளவெட்டி அருள்மிகு சுப்பிரமணிய ஆச்சிரமக்கோயில் திருக்குட நன்னீராட்டானது, கடந்த பங்குனித் திங்கள் 13ம் நாள் வளர்பிறை அருமைப் பிறை நன்னாளில் (27-03-2023) திங்கள்க் கிழமையன்று திருவருளோடு இடம்பெற்றிருந்தது.

இத்திருக்கோயில் இறைவனாக பசுபதீசுவரர் காணப்படுகின்றார். அளவெட்டி அருள்மிகு பசுபதீசுவரர் திருக்கோயிலுக்கான அடிக்கல் நாட்டல், கடந்த வருடம் 23-01-2023 அன்று இடம்பெற்றிருந்தது. அதன் அமைவாக இந்த ஆண்டு குடமுழுக்கு இடம்பெற்றிருந்தது. இத்திருக்கோயிலில் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் மற்றும் அமெரிக்காவின் ஹவாய் சுப்பிரமணிய ஆச்சிரமத்தில் நிறுவுனருமாகிய சுப்பிரமணிய சுவாமிகள் ஆகியோர் களையும் திருநிலைப்படுத்தப்பட்டு வழிபாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஹவாய் சுப்பிரமணிய ஆச்சிரமத்தில் இன்று 17 சைவத்துறவிகள் தங்கி வழிபாடு ஆற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அளவெட்டி அருள்மிகு சுப்பிரமணிய ஆச்சிரமக்கோயில் திருக்குட நன்னீராட்டானது நடைபெற்ற அதே நாளில் அமெரிக்காவின் ஹவாயில் உள்ள பெருங்கோயில் என்று அழைக்கப்படும் சிவன் கோயில் திருக்குட நன்னீராட்டும் இடம்பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**திருச்சிற்றம்பலம்**

## காரேறுமூதூரில் சித்தனைக்குட்டி சுவாமிகளுக்கு சிலைதிறப்பு



காரேறுமூதூர் என்று அழைக்கப்படும் காரைதீவில் அமைந்துள்ள, சித்தானைக்குட்டி அப்பர் சமாதிக்கு பின்புறத்தில் சித்தானைக் குட்டி அப்பரது திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு சித்தரது குருபூசைக்கு முதல்நாள் (04-08-2022) குருக்கள் மடம் எனும் ஊரில் செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட சித்தரது திருவுருவச் சிலையானது, மாசித் திங்கள் 6ம் நாள் (06-03-2023) திங்கள்க்கிழமையன்று சித்தானைக்குட்டி அப்பர் சமாதிக்கு பின்புறத்தில் திறந்து வைக்கப்பட்டது. ஈழத்து சித்தர்களில் முக்கிய பங்குடைய சித்தனைக்குட்டி சுவாமிகளுக்கு சிலை திறந்து வழிபாடு ஆற்றல் போற்றுதலுக்குரியதாகும்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**திருச்சிற்றம்பலம்**

# யாழில் தெய்வத்தமிழ்புலவர் திருவள்ளுவருக்கு சிலைதிறப்பு

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே**



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் பிரதான தபாலகத்திற்கு முன்பாகவுள்ள சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்று வட்டத்தினை மீளமைத்து அழகுபடுத்தப்பட்டு சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவர் திருவுருவச்சிலை அமைப்பதற்க்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் கடந்த வருடம் மே 29 ஆம் திகதி நடைபெற்றது. தொடர்ந்து பங்குனித் திங்கள் 3ம் நாள் (17-03-2023) வெள்ளிக் கிழமையன்று மாலை 6 மணியளவில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனால் திருவள்ளுவரின் சிலை தீரைநீக்கம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இந்திய துணைதுதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்.மாநகர சபையில் முன்னாள் முதல்வர்களான இ.ஆனல்ட் மற்றும் வி. மணிவண்ணன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.ஜெயசீலன், மத குருமர்கள், பேராசிரியர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், யாழ். வணிகர் கழகத்தினர், தொழிலதிபர்கள் என என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த அருட்பணியானது ரில்கோ (Tilko) தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜின் நிதிப் பங்களிப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்று தொடக்கம் இன்று வரை வள்ளுவர் பெருமான் யாழ் மாநகர வளாகத்தில் திருநீறு விளங்க தெய்வத்தமிழை பரப்பி நின்று விளங்குகின்றார்.


**திருச்சிற்றம்பலம்**

# மட்டக்களப்பு சிவபூமி திருமந்திர அரண்மனை திறந்து வைக்கப்பட்டது

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே** - திருமந்திரம்

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் திருக்கோயில் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருமந்திர அரண்மனை சைவத்தின் அடையாளங்களில் ஒன்றாக திகழ்கின்றது.

காலத்தால் அழியாதவாறு கருங்கற்களில் மூவாயிரம் திருமந்திர பாடல்களையும் பாரதிபுரத்தைச் சேர்ந்த வினோத் என்ற கலைஞரை (புகழுடற் சின்னங்களில் தம் கைவினையை வெளிப்படுத்திய தேர்ச்சி மிக்கவரை) கொண்டு கைகளால் செதுக்கி சிவபூமி திருமந்திர அரண்மனையில் பதித்து, 108 சிவலிங்கங்களை நிலைப்படுத்தி, செயற்கரிய சைவப்பணியை



கிழக்கிலங்கையிலும் (மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் திருக்கோயில் அருகில்) செயற்படுத்திக் காட்டியுள்ளார் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனார்.

வட புலத்தில் நாவற்குழியில் திருவாசக அரண்மனை அமைந்தமை போன்று, கிழக்கிலங்கையில் மட்டக்களப்பில் திருமந்திர அரண்மனை அமைந்துள்ளமை சிறப்பிற்குரியது. இத்தகு சிறப்பிற்குரிய மட்டக்களப்பு சிவபூமி திருமந்திர அரண்மனை பங்குனித் திங்கள் 10ம் நாள் (24-03-2023) வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும். இத்திறப்பு விழா நிகழ்வில் ஆதீன முதல்வர்கள், சமய நிறுவன உறுப்பினர்கள், திருக்கோயில் நிர்வாக சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து பேறுற்றிருந்தனர்.

**“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே”**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# செயல் வீரர்களே வாருங்கள்!

அளவில்லாத பெருமைகளையும், அனைத்துக்கும் முதலான தத்துவத்தையும் கொண்டது சைவத் தமிழ் உலகம். இன்றைய சூழ்நிலைக்கும், இனிவரும் காலநிலைக்கும் தேவையான பொருத்தப்பாடான கருத்துக்களை என்றைக்கோ சொல்லிவைத்த முதுபெரும் அறிஞர்களையும், அவர்தம் நூல்களையும் சைவத் தமிழ் மரபு எங்கனும் காணலாம். முக்காலமும் பொருந்தும், எச் சமயத்தவர்க்கும் எவ்வினத்தவர்க்கும் பயன்தரத்தக்கன அவை. உள்ளார்ந்தப் பொருள் கொண்ட எம் சமயத்தின் வெளியார்ந்த விடயங்களை நுணகி ஆராயாமல், தம் பாட்டிற்குப் பொருள் கோடல் செய்து, விமர்சனம் செய்பவர்களும், பகுத்தறிவுப் பகலவர்களாகத் தம்மைக்காட்டித் தம்பட்டம் அடிப்பவர்களும், நடுநிலை நாயகர்கள் எனத் தம்மைத் தாமே அடையாளப்படுத்துபவர்களும் தற்போது பெருகி நிற்பது ஆரோக்கியமற்ற தொன்றாகும்.

அண்மையில் யாழ்ப்பாணக் கோட்டை சுற்றுவட்ட வீதியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையில் சைவ அடையாளங்களை ஏற்படுத்துவதற்கும், அதை எதிர்த்தும் எழுந்த குரல்கள் எம் கவனத்தை ஈர்த்தன. திருவள்ளுவ நாயனாரை சமணத்துறவியாக சித்தரிக்க சிலரும், அவர் சமயங்களை கடந்தவர் எனச் சிலரும், நம்மிடையே பிறந்தும், தம் அடையாளங்களைத் திரிபடையச் செய்யவெனப் புதிய ஆராய்ச்சியாளர்களாய் முகிழ்த்துள்ளனர். எது எப்படி இருந்தாலும், இந்த சகட்டுக் குரல்களை எல்லாம் கடந்து திருநீற்றின் ஒளிவிளங்க திருவள்ளுவ நாயனாரின் சிலையை கடந்து செல்லும் போதெல்லாம் சிவபூமியின் தலைப்பூமியாக திகழும் யாழ் மண்ணில் நிமிர்வை அனுபவிக்க முடிகிறது.

சைவம் என்பது போலிப் பகட்டுக்களையும், விதிகளையும் வெறும் வழிபாடுகளையும் பூசை நடைமுறைகளையும் மட்டும் உள்ளடக்கிய மதம் இல்லை! இது வாழ்வியல் நெறி, ஒழுக்கவியலின் உன்னதமான தத்துவக்கட்டமைப்பு, அறிவு ஆராய்ச்சியின் மூலம், அனைத்துக் கேள்விகளும் அவற்றின் விடைகளும் பிறக்கும் மெய்யியல் என்பதை நாம் உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்ந்த செயல்வீரர்களாலேயே இன்று வரை இந்த சமயநெறி நிலைபெற்று வாழ்கின்றது. கிழக்கிலங்கையில் மூவாயிரம் திருமந்திரப்பாடல்களையும், கருங்கல்லில் பொறிப்பித்து, நூற்று எட்டு கருங்கல் சிவலிங்க திருமேனிகளை நிறுவி அமையப் பெற்றிருக்கும் திருமந்திர அரண்மனையும், அதனை அமைத்துக் கொடுத்த ஐயா, கலாநிதி. செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனாரும் காலமுள்ளவரை நிலைப்பார்கள். எண்ணம் செயல்வடிவம் பெறுவதென்பது, அவ்வெண்ணத்தை கொண்டு செயற்படும் ஆற்றலாளர்களான செயல் வீரர்களிடம் தங்கியுள்ளது. ஒரு செயலை எப்படி முடிப்பது என்பதையும் எண்ணத்தை செயல்வடிவமாக மாற்றுவது எப்படி என்பதையும் இளைய தலைமுறைக்கு கற்றுக் கொடுப்பதும், காலத்தின் தேவையாகிறது.

சைவத் தமிழ்ப் பணிகள் இடையறாது தொடரவேண்டுமாயின். எம் நெறியின் தத்துவத்தை விளக்கம் செய்வதற்கும் செயல்வீரர்களே இன்றும் இனியும் தேவை! எம் சமயநெறியில் பிறந்தும் உண்மை உணராதோருக்கும், தாய்ச்சமயம் மாறித் தம் நிலை மறந்து இருப்போருக்கும் தென்னாடு செந்தமிழாகம சிவமடம், உண்மை விளக்கம் கொடுக்கவும், அவர்தம் அறியாமை இருளை அகற்றவும் என்றும் முன்னிற்கும்! செயல் வீரர்களாகத் தம்மை நிலைப்படுத்தவிரும்பும் இளையவர்களே வருக! சித்தாந்த ஞானம் பெறுக!

**“தீதும் நன்றும் பிறர்தர வாரா”**

**திருச்சிற்றம்பலம்**




**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# மூன்று பத்துக்களைத் தாண்டி தென்னாடு திங்கள் இதழ்

யாழ்ப்பாணம் கொக்குவிலிலே அமைந்துள்ள தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்திலிருந்து ஒவ்வொரு திங்கள் (மாதம்) தோறும் வெளிவருகின்ற தென்னாடு திங்கள் இதழ் மூன்று பத்துக்களை கடந்து முப்பத்தொராவது வெளியீடாக மலர்கின்றது. இதழின் பயணப்பாதையில் மாத்திரமல்ல அது பயணப்பட்டுக் கொண்டிருக்கும் ஈழமண்ணிலும், அண்மைக்காலமாக எண்ணற்ற மாற்றங்கள், நேர்வழியிலும் எதிர்வழியிலும் எண்ணற்ற தோற்றப்பாடுகள் சைவம் சார்ந்து நிகழ்ந்தேறியிருக்கின்றன. அவற்றை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

1. **குருந்தூர் மலையிலே, முல்லைத்தீவு நீதிமன்றில் AR/678/18 என்ற இலக்க வழக்கின் கீழ், 12-06-2022 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பைமீறி, ஆதிசிவன் ஐயனார் கோயிலை அழிக்கப்பட்டு பௌத்த விகாரை எழுந்து நிற்கின்றது.**
2. **நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பௌத்த தூபியானது.**
3. **நிலாவெளியில் ஒரே நாளில் புத்தர் தோன்றி மறைந்தமை.**
4. **கீரிமலை ஆதிசிவன் கோயில் அழிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**
5. **கீரிமலை சடையம்மா மடம் சிதைவடைந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.**
6. **பிரபல இந்து கலாசார மண்டபம் ஒன்றிலும், பிரபல கிழக்கிலங்கை இந்துப்பாடசாலை ஒன்றிலும் மாற்றுமத நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த நிலையில் சர்ச்சைகள் வெடித்து இரத்தாகியுள்ளன.**
7. **யாழ்ப்பாணத்திலே நிறுவப்பட்ட திருவள்ளுவர் திருவுருவச்சிலை சைவசமய அடையாளங்களுடன் நிறுவப்பட்டமையால் அது தொடர்பான வாதப் பிரதிவாதங்களின் எழுச்சி.**
8. **ஆனையிறவில் கம்பீரமாக எழுந்துநிற்கும் ஆடல்வல்லானின் திருவுருவம்.**
9. **கொக்கட்டிச்சோலையில் திருமந்திர அரண்மனையின் பேரெழுச்சி.**
10. **கன்னியா வெந்நீர் ஊற்று நுழைவுச்சீட்டில் பௌத்த சமய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வெந்நீரூற்று குறிப்பிடப்பட்டுள்ளமை.**

இந்த நிகழ்ச்சிகள் அவற்றிலே இன்றியமையாதவை. அவை சைவத்திற்கு நேர்வழியில் தாக்கம் வழங்கியிருப்பினும், எதிர் வழியில் தாக்கம் வழங்கியிருப்பினும் ஏதோ ஒரு வகையில் தாக்கம் வழங்கியிருக்கின்றன என்பது தான் மிக முக்கியமான விடயம். இவ்விளைவுகளிலே அரசியலும் கலக்காமலில்லை. ஆனால் இவ்வாறான நிகழ்வுகளில் எந்நிகழ்வுகளை போற்ற வேண்டும். எந்நிகழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். எந்நிகழ்வுகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற தெளிவை மக்களுக்கு எடுத்துச் செல்ல ஊடகங்களின் வகிபங்கு கட்டாயம் அவசியமானதாகும்.

அந்த வகையில் தென்னாடு திங்கள் இதழின் முப்பத்தொராவது காலடியிலே அதன் சேவை எவ்வாறு இந்த மண்ணுக்குத் தேவை என்பதை இந்த நிகழ்வுகள் காட்டிவிட்டன. அரசியலிலே சிவில் சமூகங்கள் தான் அரசியல் சார்ந்த அறிவையும் சமுகம் சார்ந்த தெளிவையும் மக்களுக்கு வழங்கும். அரசியலின் சிவில் சமூகங்களாக சமய நிறுவனங்கள் இன்று இருப்பினும் அதைத்தாண்டியும் அவை சமயத்தின் ஊடக நிறுவனமாகச் செயற்பட வேண்டியது காலத்தின் தேவை. சமயம் சார்ந்த செய்திகளையும். கருத்துப் பகிர்வுகளையும் சாதாரண மக்களிடத்தே கொண்டு சேர்க்க வேண்டும். வெறுமனே இலக்கிய சமய இதழ்களாக அல்லது தத்துவ சமய இதழ்களாக மாத்திரம் வெளிவராது அவை சமுக சமய இதழ்களாகவும் வெளிவர வேண்டும்.

தென்னாட்டின் முப்பத்தொராவது வெளியீட்டிலே, அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றி அடுத்த தளத்தில் கால்பதிக்கின்றது. வெறுமனே தென்னாடு மாத்திரமல்லாது ஏனைய சமய நிறுவனங்களும் ஏனைய சமய வெளியீடுகளும் இப்பெரும் பணியை நிறைவேற்ற வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல ஈசனின் திருவருள் கைகூடிப் பொலிய வேண்டும்.


**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**

## ஆடு தலையாக வரும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சாராது, தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) அறிவியல் கணிப்பின் பெயரா ஆடு ஆயப்புள்ளியோடு (Fiducial Goat Origin Point) ஆட்படாது, உட்படாது, தொல்காப்பியம், சங்கத்தமிழ், பிங்கல நிகண்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களின் வழி கால ஆய்வு இல்லாது வெறுமனே தைப்பொங்கல் திருநாள் என்ற சிறப்பிற்காகவும், விடுமுறை தேவைக்காவும் மாற்றப்பட்ட ஆண்டுப் பிறப்புத் தான் தை. ஆகவே அதனை விடுத்து அறிவியலின் வழி தமிழர் பண்பாட்டு ஆழத்தினை பறைசாற்றும் சித்திரைப் புத்தாண்டை இழந்துவிடாமல் தொடர்வதே அறிவுவழி சந்ததியினரின் ஆற்றல்மிகு முடிவாகும்.




பெயரா ஆடு ஆயப்புள்ளியை (Fiducial Goat Origin Point) ஆடு ஈ ஆட்டை ஈ யாடு , யாண்டு , ஆண்டு என்று மருவிய சித்திரை மேழப்புத்தாண்டு பிறக்கும் குறியாக வானியல் அறிவியலின் அடிப்படையில் நமது சங்கத்தமிழ் கணிய வள்ளுவ பெருந்தகைகள் நிறுவினர். இதனைச் சங்கத்தமிழ் பெருங்குன்றூர் கிழார், பதிற்றுப்பத்தில் (பதி.90: 51-54)

**யாண்டு ஓரனைய ஆக யாண்டே**

**என்று ஆடு மேழவிழுவில் சேர ஆகும் புத்தாண்டே** என்று மிக நுட்பமான பதிவினைச்செய்வார்.

**திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக** (பத்து.160),

என்று சங்கத்தமிழ் நக்கீரர் (கி.பி 250) பத்துப்பாட்டு நெடுநல்வாடையில், ஆடுஃமேழ ஓரை முதலாக இருப்பதை உறுதிசெய்வார். வருடம் , வருடை ஸ்ரீ மலையாடு, மேடம் அல்லது மேழம் எனும் ஆட்டைக் குறிக்கும் சொல்லாகவே நிற்பது மறுப்பதற்கில்லை.

**சித்திரை முதலாச் சென்மாத மிரண்டா - வைத்தனவெண்ணிக் கொள்கவென்ப** (நிகண். பிங்கலம் 212)

என்று பிங்கல நிகண்டு சித்திரையே ஆண்டுப்பிறப்பின் முதல் திங்கள் என்று தெளிவுப்பட எடுத்து விளக்கி இருக்கையில்

**தை இ நின்ற , தண் பெயல் கடை நாளை** (அகம். 269/14)

தை என்பது குளூமையின் கடை நாள் என்றே குறிப்பிடப்படுகின்ற தொல்காப்பிய ஆறு கால பகுப்பிற்கு முரணான அதனை முதல் நாளாக எடுப்பது தவறானதே.

சித்திரையில் நால் ஏழ் நாளினும் (7x4=28) அதாவது இருபத்தெட்டு (28) நாட்களுக்குக் கொண்டாடப்பட்ட ஒரே தமிழர் பெரு விழா தேவர்களை வழிபடும் இந்திர திருவிழா ஒன்றே என்று மணிமேகலை பதிவுசெய்திருப்பதையும் காண்க.

**மேலோர் விழைய விழாக் கோள் எடுத்த நால் ஏழ் நாளினும்**
**நன்கு இனிது உறைக என அமரர் தலைவன் ஆங்கு அது**
(மணி. 105-108)

சிலப்பதிகாரத்திலே பூம்புகார் நகரம் இந்திரவிழவூரெடுத்த காதையில்

**“சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென வெற்றிவேல் மன்னர்க்கு உற்றதை ஒழிக்கென”** (வரி 64)”

என்று ஊரார் விழாவெடுத்தைச் சொல்கிறது சிலம்பு. அங்கே ஊரின் முதுகுடிப் பெண்டிர் **“பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென”** (சிலம்பு: 5: 72-73) என்று பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் சுரக்க வாழ்த்துவதையும் காண்கிறோம்.

அத்துடன் வானோருக்குச் செய்யும் சிறப்பொடு பூசனைத் திருவிழா, திருவள்ளுவர் காலத்திலும் பெருவிழாவாக இருந்துள்ளதை

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு** (குறள். 18)

திருவள்ளுவரும் மேலும் உறுதிப்படுத்தியிருந்தும், தற்கால தமிழ் அறிஞர்கள் இத்தகவல்களை தமிழர் கால கணிய அறிவியலுக்கு, தரவுகளாக்காது (Evidence), சான்றுகளாக்காது, கால பட்டகைகளை (Facts) முற்றிலும் அகப்படுத்தாது, தைப்புத்தாண்டு மாற்றத்தைக் கோரும் முடிவுகளை முனைந்து செய்திருப்பது, எத்தகைய தமிழ் கால மரபு திரிக்கும் முயற்சியாகும் என்பதை அன்பார்ந்தவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இது தமிழர்களின் தொன்மையை மற்றும் வானியல் அறிவினைக் குறைத்து அளவிடும் வரலாற்றுச் சதி என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆதித் தமிழர்கள் நிலவின் துணைகொண்டு ஒரு மாதத்தினை வரையறுத்தனர். அதற்கு மேலும் காலத்தினை வலியுறுத்த சூரியனின் துணைகொண்டு ஆண்டுக் கணக்கினை உருவாக்கினார். பின்னர் அதற்கு மேல் உள்ள கால நீட்சியை உள்ளடக்க வியாழனின் சுழற்சியைக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளை எனும் வகுப்பினை ஏற்படுத்தினர். இதற்கும் மேல் செல்லமுனைந்த தமிழர்கள் சனியின் சுழற்சிகைக் கொண்டு முப்பது ஆண்டுக் கணக்கினை வகுத்து கொள்கின்றனர். இதில் இருந்து வந்த வெளிப்பாடே அறுபது ஆண்டு கால அமைப்பு முறை. இந்த அறுபது ஆண்டுகளின் பெயர்களை தமிழில் கீழே காணலாம்.

நற்றோன்றல், உயர்தோன்றல், வெள்ளொளி, பேருவகை, மக்கட்செல்வம், அயல்முனி, திருமுகம், தோற்றம், இளமை, மாழை, ஈச்சுரம், கூலவளம், முன்மை, நேர்நிரல், விளைபயன், ஓவியக்கதிர், நற்கதிர், தாங்கெழில், நிலவரையன், விரிமாண்பு,முற்றறிவு, முழுநிறைவு, தீர்பகை, வளமாற்றம், செய்நேர்த்தி, நற்குழவி, உயர்வாகை, வாகை, காதன்மை, வெம்முகம்,பொற்றடை, அட்டி, எழில்மாறல் , வீறியெழல், கீழறை, நற்செய்கை, மங்கலம், பகைக்கேடு, உலகநிறைவு, அருட்டோற்றம், நச்சுப்புழை, பிணைவிரகு, அழகு, பொதுநிலை, இகல்வீறு, கழிவிரக்கம், நற்றலைமை, பெருமகிழ்ச்சி, பெருமறம், தாமரை, பொன்மை, கருமைவீச்சு, முன்னியமுடிதல், அழலி, கொடுமதி, பேரிகை, ஒடுங்கி, செம்மை, எதிரேற்றம், வளங்கலன் என்பவாகும்.

இதன் அடிப்படையிலே இராவணன் ஆண்ட இலங்கைத் தமிழர்கள் அத்துணை பேரும் புத்தாண்டினைக் கொண்டாடி வருகின்றனர் என்பதனை கருத்தில் கொள்ளவும். அத்தினத்திலே காலையில் எழுந்து, மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து, கடவுள்,தெய்வங்கள் மற்றும் பெரியோரை வணங்கி, கோயிலுக்கு சென்று, உற்றார் உறவினர்களுக்கு சிற்றுண்டிகள் கொடுத்து, ஊருடன் கூடி குதூகலித்து கொண்டாடுவர்.

# யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் சிவாக்கர சுவாமி மற்றும் ஒளியரசு ஐயா அவர்களின் அருள் உரை நிகழ்வுகள்













# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



### உயிரின் இயல்பு என்ன?

உயிர் ஒரு அறிவுடைப் பொருள், அறிவு உள்ளபடியால் அதனால் செயல் புரியவும் விருப்பப்படவும் முடிகிறது. சைவசித்தாந்தத் துறையில் உயிரின் அறியும் ஆற்றல், செயல் புரியும் ஆற்றல், விரும்பும் ஆற்றல் ஆகியவை முறையே ஞானம், கிரியை, இச்சை என்று அழைக்கப் படுகின்றன. இச்சை, ஞானம், கிரியை ஆகியவற்றின் வடிவமாகவே உயிர் இருக்கிறது. இதனால் அதனை 'இச்சா ஞானக் கிரியா சொரூபி' என்று கூறுவதும் உண்டு. ஆயினும் இந்த ஆற்றல்கள் தானாக வெளிப்பட முடியாமல், ஆணவத்தின் சேர்க்கையால் தடைப்பட்டுள்ளன.

கடவுள் படைத்தளித்த உடம்பின் மூலமே உயிர் எதனையும் அறிவதும், செயற்படுவதும், இச்சை கொள்வதுமாகவுள்ளது. உடம்பென்னும் பொழுது அது கண் முதலிய புறக்கருவிகளையும், மனம் முதலிய அகக்கருவிகளையும் உள்ளடக்கும். உயிர் தானாக எதனையும் அறியும் நிலையில் இல்லை. அறிவித்தால் அறியும் இயல்புடையது உயிர் எதனையும் சார்ந்திருப்பதும் உயிரின் இயல்பு. எதனைச் சார்ந்திருக்கிறதோ அதன் தன்மையை அது பெறுகிறது. உயிரின் இத்தன்மை 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்று கூறப்படும். உலகப் பொருட்களை சார்ந்திருக்கும்போது உலகப் பொருட்களின் தன்மையைக் கொண்டிருக்கிறது. முத்தியடைந்த பொழுது இறையைச் சார்ந்திருக்கும். அப்பொழுது அது இறைதன்மையைக் கொண்டிருக்கும்

'அறிவித்தால் அறிவது', 'சார்ந்ததன் வண்ணமாதல்' ஆகிய இயல்புகள் கொண்ட நிலை உயிரின் சொரூப நிலை (தன் நிலை) என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடும்.

பாசத்தைச் சார்ந்து கட்டுப்பட்டு இருக்கும் பொழுது உயிர் பல்வேறு குணங்களைக் கொண்டிருக்கும். இது அதன் பொதுநிலை. சைவ சித்தாந்தத்தில் இந்நிலை 'தடத்தநிலை' என்று கூறப்படும். இதில் 'அவத்தைகள்' என்று உயிரின் பல்வேறு நிலைகள் கூறப்படுகின்றன.

### அவத்தை என்பதன் விளக்கம் என்ன?

அவத்தை (அவஸ்தை) என்பது (உயிரின்)அனுபவநிலை. ஆன்மீக வளர்ச்சியால் உயிர் ஒன்றன் பின் ஒன்றாகப் பல பிறவிகள் எடுக்கிறது. பிறவிகள் எடுக்குமுன், ஆணவத்துடன் கூடி, தனது ஆற்றல் எதுவும் வெளிப்படாமல், உயிர் ஒரு தனி நிலையில் இருந்தது. இந்த நிலை உயிரின் கேவல நிலை எனப்படுகிறது.

பிறவிகள் எடுத்த உயிர் உடல், உலகப் பொருட்கள் ஆகியவற்றுடன் கூடிச் செயற்படுகின்றது. அதன் ஆற்றல்கள் சிறிது சிறிதாக வெளிப்படுகின்றன. இந்த நிலை உயிரின் சகல நிலை எனப்படுகின்றது.

முத்தியடைந்த பொழுது, உயிரைப் பிணித்த ஆணவம், கன்மம், மாயை ஆகியவை விலகிப்போக அது சிவத்தைச் சார்கிறது. இந்த நிலை உயிரின் சுத்த நிலை எனப்படுகிறது.

கேவலம், சகலம், சுத்தம் ஆகிய மூன்று நிலைகளும் உயிரின் மூன்று அவத்தைகள். இவை காரண அவத்தை எனப்படும் அனுபவ நிலைகள். இவை தவிர சகல நிலையில் உயிர் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய அனுபவ நிலைகளைப் பெறும். இவை முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் எனத் தமிழில் கூறப்படும். இந்த அனுபவ நிலைகள் காரிய அவத்தை எனப்படும்.

### மும்மலங்களின் பிணிப்பு உயிருக்குயிர் வேறுபடுகிறதா?

ஆம், மலப்பிணிப்புக்கேற்ப உயிர்களை மூன்று வகையாகத் தொகுப்பதுண்டு. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலக் கட்டுடைய உயிர்கள் சகலர் எனப்படுவர். ஆணவமும் கன்மமுமாகிய இருமலக் கட்டுடைய உயிர்கள் பிரளயாகலர் எனப்படுவர். ஆணவக்கட்டு மட்டும் உடைய உயிர்கள் விஞ்ஞானகலர் எனப்படுவர்.

### தத்துவத்துறையில் 'சத்', 'அசத்' என்று இரு சொற்கள் காணப்படுகின்றன. இவற்றின் பொருள் என்ன? ஆன்மா சத்தா? அசத்தா?

இறை, உயிர், உலகப் பொருட்கள் ஆகியவற்றை சத், அசத் (சத்து, அசத்து) என்று இரு பிரிவாகத் தொகுப்பதை இந்திய தத்துவங்களில் காணலாம். இவற்றின் விளக்கம் தத்துவத்துக்குத் தத்துவம் வேறுபடுகிறது. உயிருள்ளது-உயிரற்றது, நிலையுள்ளது-நிலையற்றது என்று வெவ்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன.

இத்தத்துவங்கள் பொதுவாக இறைவனைச் சத் என்றும் பிறவற்றை அசத் என்றும் பிரிக்கின்றன. சத், அசத் என்ற சொற்களின் விளக்கத்திற்கேற்ப உயிரைச் சத் என்றோ அசத் என்றோ இத்தத்துவங்கள் உரைக்கின்றன. சைவ சித்தாந்தத்தின் படி சத்தாகிய இறையைச் சாரும் பொழுது உயிர் சத்தாகவே மாறுகிறது. ஆனால் அது அசத்தல்ல. அசத்தாகிய உலகப் பொருட்களைச் சாரும் பொழுது அது அசத்தாகவே மாறுகிறது. ஆனால் அது அசத்தல்ல. இத் தன்மையால் உயிரைச் சத்தென்றோ, அசத்தென்றோ கூறமுடியாத ஒரு நிலை உள்ளது. இதனால் சதசத் (சதசத்து) என சைவ சித்தாந்தத்தில் உயிர் அழைக்கப்படுகிறது..

சதசத் என்பதன் பொருள் சத்தாகவும் அசத்தாகவும் இருப்பது என்பதல்ல சத்தும் அல்ல அசத்தும் அல்ல என்பதே.

சத், அசத் என்ற சொற்களுக்குச் சைவ சித்தாந்தம் தரும் விளக்கமும் மற்றைய தத்துவங்களிலிருந்து சிறிது வேறுபடுகிறது. சத் என்பது நிலையான, மாற்றமில்லாத ஒன்றையே குறிக்கும். இதன்படி இறைவன் சத்துப் பொருள், உயிர் சதசத்து, மற்றையவை அசத்துப் பொருட்கள்.

### 'சத்' என்பதைப்போல் 'சித்' என்றும் சொல்லப்படுகிறதே இதன் விளக்கம் என்ன?

சித்(சித்து) என்றால் அறிவு. இறைவன் இயல்பாகவே எதனையும் அறியும் அறிவுப் பொருளானவன். ஆகவே அவனை சித் என்று கூறுவர்.

உலகப் பொருட்கள் அறிவற்றவை அவை சடப் பொருட்கள். ஆகவே அவை அசத் என்று கூறப்படுகின்றன. உயிர் அறிவித்தால் அறியும் இயல்புடையது. சார்ந்ததன் வண்ணமாவது என்பதால், அது எதனைச் சார்ந்திருக்கிறதோ அதற்குத்தக அதன் அறிவு விளங்குகிறது. அறிவுடையது (சித்) என்றும் கூறமுடியாமல், அறிவற்றது (அசித்து) என்றும் கூறமுடியாத நிலையில் அது இருக்கிறது. இதனால் உயிர் சிதசித்து எனக் கூறப்படுகிறது.

இறைவனின் அறிவைப் போலன்றி, உயிரின் அறிவு கட்டுப்பட்ட அறிவாக உள்ளது. இதனால் பதியாகிய இறைவனைச் 'சூக்குமசித்து' என்றும், பசுவாகிய உயிரை 'தூல சித்து' என்றும் அழைப்பதுமுண்டு.

### இறைவனின் பொது இயல்பு, சிறப்பு இயல்பு என்பவை போல் உயிரின் இயல்புகளை இப்படி வகைப்படுத்துவதுண்டா?

உயிருக்கு இறைவன் கை, கால், கண், வாய் முதலிய கருவிகளும் மனம், புத்தி முதலிய கரணங்களும் சேர்ந்த உடம்பைப் படைத்து அளிக்கின்றான். இக்கருவி கரணங்கள் மூலமே உயிர் எதனையும் அறிகின்றது அதுவும் இறையருளால் நிகழ்கிறது. இறைவன் அறிவிக்க உயிர் அறிகிறது. அறிவிக்க அறிவது உயிரின் பொது இயல்பு. முன்பு கூறிய நனவு, கனவு போன்ற அவத்தை நிலைகளுக்கு உயிர் உட்படுவதும் அதன் பொது இயல்பு.

உயிர் ஏதேனும் ஒன்றைப் பற்றி, "சார்ந்ததன் வண்ணமாக நிற்கும்". இது பொது வகையில் அமைந்த அதன் 'சிறப்பியல்பு'. கருவி கரணங்கள் நீங்கிய நிலையில் சிவமாம் தன்மை பெற்று நிற்கும் நிலை உயிரின் சிறப்பு வகையாக அமைந்த 'சிறப்பில்பு'. சுருங்கச் சொல்லின் பிறப்புக்குட்பட்ட நிலை உயிரின் பொது இயல்பு. பிறப்பு நீங்கி சிவத்தைச் சேர்ந்த நிலை உயிரின் சிறப்பு இயல்பு.

### உயிர் பிறவி எடுப்பதன் குறிக்கோள் என்ன?

உயிருக்கு இயற்கைக் குற்றமாக (சகச மலமாக) அமைந்த ஆணவத்தின் பிடியிலிருந்து விடுபட்டு சிவபெருமானின் திருவடியைச் சேர்தலே பிறவி என்பதன் குறிக்கோள். சிவனின் திருவடி அவனின் அருளேயாகும்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்னும் தவத்திரு ஆறுமுக நாவலரின் வார்த்தையும் சிந்தனைக்குரியது.

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கணேசலிங்கம்)

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே** - திருமந்திரம்

### சைவசமயம் தவிர்ந்த மற்றைய மதங்களில் பெண்களுக்கு முத்தி என்கிற விடயம் உள்ளதா?

இந்திய சமய மரபுகளில் ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்ட ஏகான்மவாதக் கொள்கையினை முன்வைக்கும் மதம் சுமார்த்தமதம் எனப்படும். இம்மதத்தினை மாயாவாத மதம் என்றும் அழைப்பர். இம்மதத்தில் பெண்களுக்கு முத்தியில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆதிசங்கரர் பிரம்மசூத்திரத்திற்கு உரையெழுதும்போது, பிரம்மத்தினைக் குறித்த அறிவு உண்டாகவேண்டும் என்றால் பிராமணப் பிறவியினை ஒருவன் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அங்ஙனம் பிராமணப் பிறவியினைப் பெற்றாலும் ஆணாகப் பிறந்தால் மட்டுமே பிரம்ம ஞானம் வாய்க்கும் என்றும் கூறுகின்றார். உபநிடதங்களுக்கு உரையெழுதும்போது, பெண்களுக்கு அறிவு உண்டு என்பது சமையல் அறிவேயொழிய பிரம்ம அறிவல்ல என்று ஆதிசங்கரர் சாதிக்கின்றார். விசிட்டாத்வைத வைனவத்தினைத் தாபித்த இராமனுசரும் பிரம்மசூத்திர உரையெழுதும்போது பெண்களுக்கு முத்தி இல்லையென்றுதான் பொருள்கொள்கின்றார். ஆண்டாள் முத்தி பெற்றதாகக் கொள்ளப்படினும், ஆண்டாள் தெய்வப்பிறவி என்பது இராமனுசரின் அக்கொள்கையினை ஏற்றோர் வாதமாகும். எனவே, முத்திக்கு ஆணாக உயிர்கள் பிறக்கவேண்டும் என்பது இம்மதத்தாரின் கொள்கையாகும். சமண மதமும் வீடுபேறுக்கு துறவு ஒன்றே வழிவகுக்கும் என்றும், அத்துறவு ஆண்களுக்கே உரித்தானதென்றும் வலியுறுத்துகின்றது. பௌத்தமதத்தில் இன்று பெண் துறவிகள் இருந்தாலும், கௌதம புத்தருக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, எவரும் முத்திபெற்றதாகச் செய்தியில்லை. புத்த சங்கத்தின் கொள்கைப்படி, மூத்த பெண் துறவியேயானாலும் இளம் ஆண் துறவியின் ஏவலுக்கு உட்பட்டவரே என்பதாகும்.

பௌத்த பகுதாதுகா சூத்திரம் ஒரு பெண் ஒருபோதும் முத்தியினை அடையமுடியாது என்று கூறுகின்றது. மகாயான பௌத்தம் ஒரு பெண் முத்தி (வீடுபேறு) அடையவேண்டுமானால், அதற்கு தகுகியானவளாக இருந்தால், அப்பெண் ஆணாகப் பிறக்கும் வாய்ப்பினைப் பெற்று முத்தியினைப் பெற்றுக்கொள்வாள் என்று கூறுகின்றது. பெண் பிறப்பு தீயகர்மாவினால் விளைவதென்று தேரவாத பௌத்தத்தில் கூறப்பட்டுள்ளது. தேரவாத பௌத்தத்தில் பெண்கள் போதிசத்துவர் ஆகமுடியாதென்று கூறப்பட்டுள்ளது. சில தேரவாத பௌத்த பாலி நூல்கள் நிர்வாண நிலை (முத்தி) பெற்றவர்கள் தொகுப்பினைக் கூறுகின்றன. அதில் பெண்களின் பெயர் உண்டு என்பது சிலர் கருத்தாகும். முத்திக்கு பால்பேதம் தடையில்லை என்று புத்தர் கூறியுள்ளார் என்று கருதும் பிரிவினரும் பௌத்தத்தில் உள்ளனர்.

### சரி அப்படியென்றால் சைவத்தில் எப்படி? சைவத்தில் பெண்களுக்கு முத்தி உண்டு என்பதினை எங்ஙனம் நீங்கள் விளக்குவீர்கள்.

காரைக்கால் அம்மையார், இசைஞானியார், மங்கையர்க்கரசியார் மூவரும் முத்திபெற்ற பெண் நாயன்மாராவர். இளையான்குடிமாற நாயனார் முதலிய பல நாயன்மார்களும் முத்தி பெற்றபோது, மனைவியுடனேயே முத்தி பெற்றதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. சிறுதொண்டர் நாயனார் சரிதத்தினைக் கூறும்போது, வீட்டுப் பணிப்பெண்ணுக்கும் முத்தி உண்டு என்பதினை பெரியபுராணம் எடுத்துக்காட்டியுள்ளது. சிவாகமங்கள் சமயம் முதலிய சகல தீக்கைகளும் பெண்களுக்கும் உரியதென்று விதித்திருப்பது இவ்வுண்மையினை உணர்த்துவதற்கேயாகும்.

### சைவ சமயத்தில் பெண்களுக்கும் முத்தி உண்டென்றால் வழிபாட்டு மரபில் பெண்களுக்கு முதன்மை கொடுக்காதது ஏன்?

தேவார முதலிகளின் காலத்திற்குப் பிறகு ஆதிசங்கர் காலத்தில் பெண்களுக்கு முத்தியில்லை என்ற சுமார்த்தமதக் கொள்கையை சில மக்கள் உண்மை என்று எண்ணி பின்பற்ற தொடங்கினர். ஆதிசங்கரர் பெண்களுக்கு முத்தியில்லை என்பதினை மிகவும் ஆணித்தரமாக எழுதி உபநிடதங்களினையெல்லாம் திரித்து நிறுவுகின்றார்.

மாணிக்கவாசகப்பெருமான், **“மிண்டிய மாய வாத மென்னும் சண்ட மாருதம்”** என்று ஆதிசங்கரரின் கொள்கையினைத் திருவாசகத்தில் பெரும் கேடுடையதாக உணர்த்தியருளுகின்றார். தாயுமானசுவாமிகள், இம்மதத்தின் கொள்கையினால் ஆணவமே பெருக்கும் என்கின்றார். சைவ அருளாளர் நிராகரித்த ஆதிசங்கரர் தாபித்த மதக் கொள்கை, சைவர்களின் அறிவு மயக்கத்தினால் சைவத்தினுள் நன்றாக ஊடுருவிவிட்டது. சங்கராச்சாரிய மடத்தவர்களும் சுமார்த்த மதத்தவர்களும் திருநீறு அணிந்திருப்பதினால், சைவசமயத்தவர்களுக்கு சுமார்த்தமதத்தார் புறச்சமயத்தார் என்பதினை இனங்கண்டறிவது கடினமாக உள்ளது. சைவப் பெண்கள் சைவசமயத்தை நுணுகி ஆராய்ந்து உண்மையை அறியவேண்டும்.

### பெண்கள் இறைவனுக்கு பூசை செய்யலாமா ?

தாராளமாகச் செய்யலாமே! அதில் என்ன சந்தேகம்! கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

சிவபூசை இருவகைப்படும். தம் உயிரின் முன்னேற்றத்தின் பொருட்டு செய்வது ஆன்மார்த்த சிவபூசை என்றும், ஏனைய உயிர்களின் விண்ணப்பத்தின் பெயரிலும், ஏனைய உயிர்களின் நலத்தின்பொருட்டும் செய்வது பரார்த்த பூசை என்றும் கூறப்படும். சிவபெருமான் உயிர்களுக்கு பூசை செய்வது எங்ஙனம் என்பதினை காட்டியருள திருவுளம் கொண்டபோது, உமாதேவியாரினைக் கொண்டுவித்து சிவபூசை செய்வித்தே காட்டியருளினார். உமாதேவியார் உயிர்களின்பொருட்டு சிவபூசை செய்த புராணச்செய்திகள் பலவுண்டு. சமய தீக்கைகள் முதலிய சகல தீக்கைகளும் பெண்களுக்கும் உண்டென்று சைவம் வலியுறுத்துகின்றது. விசேட தீக்கை பெற்றுக்கொண்டோர் ஆன்மார்த்த சிவபூசை செய்வது கடமையாகின்றது. எனவே, பெண்கள் பூசை செய்தல் கூடாதென்பது தவறான கருத்தாகும். அது சைவசமயக் கருத்தல்ல் சுமார்த்தமதக் கருத்தேயாகும்! சிவாச்சாரிய நன்னீராட்டு பெண்களுக்கும் உரித்தானதேயாகும். பெண்களுக்கு விலக்கப்பட்டதாக எங்கும் இல்லை. சிவாச்சாரிய நன்னீராட்டு பெற்றுக்கொண்டவர் எவரும் பரார்த்தபூசை செய்யலாம் இதுவே நியதி.

### தீட்டு என்பது உண்மையிலேயே உண்டா?

**ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்**
**ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிகிலார்**
**ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிந்தபின்**
**ஆசூசம் மானுடம் ஆசூசம் ஆமே.** - திருமந்திரம்.

உயிர் சிவத்தினைச் சாராமல், உடலினைப் பெற்று உலக மாயைக்குள் மூழ்கியிருப்பதே உண்மையான தீட்டு என்பது திருமூலர்பெருமானின் அருள்வாக்காகும். உயிர் சிவத்தினைச் சார்வதன் முதன்மையினை வலியுறுத்துவதே இப்பாடலின் நோக்கம் என்பதும், அதற்கு அனுகூலமான புறத்தூய்மையினை இப்பாடல் நிராகரிக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். எங்ஙனம் திருநீறு, உருத்திராக்கம் முதலிய புற அடையாளங்கள் அகத்தினை தூய்மை செய்கின்றனவோ, அதுபோல் புறத்தூய்மை அகத்தூய்மைக்கு துணைக்கருவியாக விளங்கும். ஆனால், புறத்தூய்மை என்பது யாது என்பதுதான் நாம் சிந்திக்கவேண்டியவொன்று.



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

அகத்தூய்மையானது பொது அறங்களினைப் பேணும் அகத்தூய்மை என்றும், சிவவழிபாடு சம்பந்தமான சிறப்பு அறத்தினைப் பேணும் சிறப்பு அற அகத்தூய்மை என்றும் இருவகைப் படும். இவற்றுக்கு கருவியாக விளங்கக் கூடிய புறத்தூய்மையினையும் இரு வகையினதாகக் கூறலாம். உணவு எந்த இனத்தார் சமைத்தனர் என்பதிலேயோ, எந்தத் தட்டத்தில் உணவு உண்டோம் என்பதிலேயோ, யார் பார்க்க உணவு உண்டோம் என்பதிலேயோ புறத் தூய்மை ஏற்படப்போவதில்லை. சிவ பெருமானை நிந்திக்கும் ஒருவர் சமையலில் புறக்கணிக்கப்படவேண்டியவரே! சிவபெருமானை நிந்திக்கும் ஒருவரோடு இணங்கியிருந்து உண்பது தீதே! சிவபெருமானை நிந்திக்கும் ஒருவர் வழங்கும் தட்டத்தினை ஏற்பது தீதே! அதுபோல், சிவபெருமானைப் போற்றும் ஒருவரிடம் சாதி முதலிய பேதங்களினைக் காண்பது பெரும் கேட்டையே நமக்குக் கொடுக்கும்.

எனவே, சிவத்தொடர்புகளைத் தடுக்கும் புறத்தீட்டு என்பது சிவபெருமானைப் போற்றும் சிறப்பு அறங்களில் இருந்து விலகியிருப்பாரிடத்தே நாம் சுயநலங்களின்பொருட்டு பேணும் இணக்கமேயாகும். இவை அகத்தூய்மையாகிய சிவ சிந்தையினைக் கெடுக்கும் புற உடலுக்குரிய தொடர்பாகும்.

அதுபோல், உணவு மூலம் பரவக்கூடிய குடல் புழுத் தொற்றுநோய்கள், உணவுமூலம் பரவக்கூடிய ஏனைய தொற்றுநோய்களினை உடைய ஒருவர் சமையலில் விலக்கப் படவேண்டியவரேயாகும். அவரினால் தொற்றுநோய்கள் மக்களிடத்தே பரவும். தொற்றுநோய்களுக்குரிய மருத்துவத்தினை நாடாது சமூக அக்கறையின்றி இருப்போர் உலக அறத்தில் இருந்து பிறழ்ந்தோரேயாகும்.

அதுபோல் வஞ்சகர் சமைத்த உணவும் தீதே! நஞ்சு கலந்த உணவினை வழங்கவும் வஞ்சகர் அஞ்சார். பிறன்மனை நயப்பவரோடு கூடியிருந்து இணங்கி உண்டு ஆதரித்து வாழ்தல் தீதினையே தரும். திருடர் தரும் தட்டினை ஏற்று உண்பதும்தீதினையே தரும். எனவே, உலக அறங்களில்இருந்து பிறழ்ந் தவருடன் கூடுவதும் உலகியல் தீட்டினைத் தரும்.

### பெண்களுக்குரிய மாதவிடாய் ஒரு தீட்டா?

நோய்களினைத் தீட்டாகப் பார்ப்பது பண்டைய மரபாகும். தொற்று நோய்கள் பரவாமல் இருப்பதற்கும் தீட்டு என்பது ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில், மாதவிடாய்க் காலத்தில் பெண்களுக்கு இடுப்புவலி, முதுகுவலி, தலைவலி என்பவற்றுடன் மன அழுத்தமும் அதிகரித்திருக்கும். இக்காலத்தில் பெண்களுக்கு ஓய்வு அவசியமானவொன்று. எனவே, மாதவிடாய் தீட்டுக் குரியதாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பதுவே யுத்தி அளவுகோலுக்கு அமைவான விளக்கமாகும். மருத்துவமும் விஞ்ஞானமும் வளர்ந்துள்ள இக்காலத்திலும் பல்வேறு வசதிகள் மாதவிடாய்க் காலத்தில் பெண்களுக்கு உருவாகியுள்ளபோதும், பணியிடங்களில் அவர்கள் ஓய்வுபெற்றுக் கொள்ளக்கூடிய உரிமையினை வேண்டிப் பெண்ணுரிமை அமைப்புகள் பலவும் முயற்சி செய்துவருகின்றனர். மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் மன அழுத்தம் முதலிய பல்வேறு பிரச்சினைகளுக்கு ஓய்வுதான் சிறந்த மருந்தாக இன்றும் கருதப்படுகின்றது. எனவே, பெண்களினை வீட்டு வேலைகளினையெல்லாம் இழுத்துப்போட்டுச் செய்யும் ஒரு பிறவியாகக் கருதியோர் பெருத்திருந்த அக்காலத்தில் மாதவிடாய்க் காலத்தில் ஓய்வினை வலியுறுத்தும்பொருட்டுத் தீட்டாகக் கொண்டனர் என்கிற புரிதல் வேண்டும்.

மேலும் மலம் சலம் கழிப்பது, மூக்குச் சிந்துவது முதலிய உடற் கழிவுகளினையெல்லாம் வெளியேற்றுவது கோயிலினுள் ஆதரிக்கப்படவில்லை. புனிதமான இடம் என்று போற்றப்படும் இடத்தில் மனிதக் கழிவுகள் ஆதரிக்கப்படமாட்டா! மாதவிடாய்க் காலத்தில் குருதிப்போக்கு என்பது மனிதக்கழிவேயாம். குழந்தைகளுக்கு இன்றைய காலத்தில் பம்பர்சு அணிவித்தாலும், கோயிலினுள் பம்பர்சினுள் மலம் கழித்துவிட்டால் உடனடியாக அக்குழந்தையினை கோயிலிலிருந்து வெளியே கொண்டுவந்து கழுவிக் கொள்கின்றோம். இது குழந்தையினை அவமானப்படுத்துவதில்லை. மாறாக, கடவுள் எழுந்தருளியுள்ள கோயிலினுள், மனிதக்கழிவுகளினைப் பேணுவதோ அதனால் ஏற்படும் நோய்த்தொற்றுகள் என்னும் சங்கடத்தின் பொருட்டேயாகும்.

புண்ணோடு உள்ள ஒருவர் கோயிலில் பூசைகள் செய்வதினை சிவாகமங்கள் கண்டிக்கின்றது. மூலட்டானத்தில் செய்யும் அபிடேகத் தீர்த்தம் கோமுகையினால் பலரும் பெற்று அருந்துகின்றனர். புண்ணோடு உள்ள ஒருவர் கோயிலில் பூசைகள் செய்தால், புண்ணில் இருக்கும் நோய்க்கிருமிகள் பலருக்கும் பரவும் என்பதினாலேயே சிவாகமங்கள் அத்தகையோர் பூசைசெய்தல் கூடாது என்று கண்டிக்கின்றன. இது அவரினை அவமானப்படுத்தும் நோக்கில் இல்லை. மாறாக, பொது இடங்களில் அவர் ஒரு நோய்க் காவியாக இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே, நாம் ஒரு கூற்றினை எந்தக் கோணத்தில் இருந்து அணுகுகின்றோம் என்பதில் எங்களின் முடிவு வேறுபடும்.

**கேட்போம் தெளிவோம் ஊடாக உங்கள் ஐயங்களைத் தெளிய, ஐயங்களை அனுப்பவேண்டிய முகவரி**
**தென்னாடு சிவமடம்,தென்னாடு வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**மின்னஞ்சல்** thennavan@thennadu.org
**புலனம்** +94 70 770 1111

# திருக்கோணமலையில் சைவம் மேலோங்க வித்திட்ட அம்மையார்

# தெய்வத்திருமதி. அன்னை தங்கம்மா சண்முகம்பிள்ளை அவர்கள்

## (இந்த ஆண்டு நூற்றாண்டு விழாக் காணும் திருமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியை நிறுவிய பெருமாட்டி)

தமிழின், தமிழரின், சைவத்தின் தலைநிமிர் கழகமாக திருகோணமலையில் திகழ்வது சண்முகா இந்து மகளிர் கல்லூரி. சைவப் பெண்களை வளப்படுத்தி, அறிவுடன் ஞானத்தினையும் ஊட்டி, பண்பாட்டின் அடையாளமாக, பார்போற்றும் வருங்காலப் பெண்கள் தலைமையாக அதனிலும் மேலாக ஒரு சைவப் பண்பாட்டு வழிவரும் தாய்மார்களை உருவாக்கும் கல்லூரி, சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஆகும்.

இந்த நோக்கத்தினை இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் சிந்தித்து, திருமலையில் பெண்களுக்கு நல்லதொரு கல்வி மட்டுமல்ல சைவத்தின் விழுமியங்களையும் கொடுக்க எண்ணி இந்தப் பாடசாலைக்கு வித்திட்டவர் திருவாளர் சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை ஐயவினை தன் உயிருக்குள் கொண்டு வாழ்ந்த தெய்வத்திருமதி. சண்முகம்பிள்ளை தங்கம்மா அம்மையார் அவர்கள். இங்கு கல்வி பயின்ற மற்றும் பயில்கின்ற மாணவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு வாழ்வில் உயர்வது மட்டுமல்லாமல் அம்மாவின் சிந்தனைகளை தொடர்ந்து செயற்படுத்தி திருமலையில் ஏன் இலங்கையிலே சைவமும் தமிழும் தழைத்தோங்க பாடுபடவேண்டும். கல்லூரியும் அம்மாவின் வரலாற்றினை பிள்ளைகளுக்கு எடுத்தியம்பி அம்மாவைப் போல் இன்னும் பலரை உருவாக்க முனையவேண்டும்.

அம்மையார் தங்கம்மா அவர்கள், 1863ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி, இன்று பல கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள தம்பலகாமம், பட்டிமேட்டில் சைவப் பண்பாடுமிக்க ஓர் விவசாயக் குடும்பத்தில் வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியினரின் குலமகளாய் பிறந்தார்.

கண்களில் கூர்மையும், செயல்களில் விவேகத்துடன் கூடிய வேகமும் சிறு வயது முதலே அன்னையிடம்



குடியிருந்தன. எந்தவொரு செயலையும் நேர்த்தியுடனும், துணிச்சலுடனும் செய்து முடிக்கும் ஆற்றல் அவருடைய சிறப்பம்சமாக விளங்கிது. மிகவும் துடிப்பான ஓர் சுட்டிப்பெண்ணாகவே இவர் வளர்ந்தார்.

தம்பலகாமம் ஓர் சிறிய கிராமம். ஆயிரத்தி எண்ணூறுகளில் திண்ணைப் பள்ளி வழக்கமே இருந்து வந்தது. ஆண் பிள்ளைகளுக்கு சைவசமயம், தமிழ், கலாசாரம், பண்பாடு மற்றும் ஒழுக்க நெறிகள் என்பன கற்பிக்கப்பட்டு வந்தன. அக்காலகட்ட வழக்கத்தின்படி பெண்பிள்ளைகள் தமது தாய், பாட்டி, வீட்டிலுள்ள பெரியோர்கள், உறவினர்களின் வழிகாட்டல், வழிநடத்தல்களின்படியே தமக்கான கல்வியினை கற்றுவந்தனர்.

அவர்களுக்கான கல்வியானது தமது குடும்பங்களின் பெருமை, ஒழுக்கம், பண்பாடு, கலாசாரங்களை நெறிப்படக்கற்று அதனைக் கடைப்பிடிப்பது என்பதாகவே அமைந்திருந்தது. வெளியே கோயில்களுக்குச் செல்லும் சந்தர்ப்பங்கள், சமய விழாக்கள், நெருங்கிய உறவினர்களின் மிக முக்கியமான நிகழ்வுகளின் போது மட்டுமே பெண்பிள்ளைகள் தமது பெற்றார், உறவினர் பாதுகாப்புடன் செல்லும் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும். பெண் பிள்ளைகளுக்கு வீட்டில் வசிக்கும் அன்னையிடமும், பாட்டியிடமும் கற்றுக்கொள்ளும் வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத் தேர்வதுதான் அவர்களின் கல்வி என்றானதொரு காலமது.

வயது, அறிவு, விருப்பு, வெறுப்பு என்பதற்கப்பால், பெற்றோர் திருமண ஏற்பாடு செய்யும் வேளை எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்காமலும், வாதாட்டங்கள் மேற்கொள்ளாமலும் பெற்றோர் தெரிவு செய்பவரை, பெண்பிள்ளைகள் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற காலம் அது. புகுந்த வீட்டிற்குச் செல்லும் பெண்பிள்ளை அமைதியாகவும், குடும்பத்தின் நன்மைக்காகவே வாழ்ந்து, அனைவரையும் மதித்து, குடும்பப் பெருமையைக் காத்து தன் தலைமுறையைப் பேணி வளர்க்கும் குலமகளாய் மணம்முடித்துக் கொள்வதுதான் பெண்பிள்ளைகளுக்கான ஒரே ஒரு இலக்காக இருந்த காலம்.

பெண் கல்வி இவ்வாறான வரையறைக்குள் கட்டுப் படுத்தப்பட்டதொரு காலகட்டத்தில்தான் எம் அன்னை



திரு.சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை — திருமதி.தங்கம்மா சண்முகம்பிள்ளை

பிறந்திருந்தார். இருப்பினும் அன்னையின் பெற்றோர் மிகவும் சைவப் பண்பாட்டு வழி வந்தவர்கள் என்பதால், அன்னைக்குத் தன் வீட்டுத் திண்ணைப்பள்ளியில் சிறிய வயதில் கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். ஐந்து வயதிலேயே சமூகக் கட்டுப்பாடுகளுக்கு பெண்பிள்ளைகள் உட்படுத்தப்படுவர். இவ்வாறான பேணி சிறுமி தங்கம்மாவும் வளர்ந்திருந்தார்.

இயற்கையாகவே பேரழகுடன் திகழ்ந்த அன்னையின் அழகிற்கு அவரது பண்பாடுகளும்,கலாசார நெறிகளும்மேலும் மெருகூட்டின. மிகவும் சைவப் பண்பாட்டுக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததனால் அன்னையின் வளர்ப்பிலும் சைவப் பண்பாடு விழுமியங்கள் ஊறியிருந்தன.

திருகோணமலையில் பெரும் செல்வந்தர் குடும்பத்தில் சீமான் சிற்றம்பலம் தம்பதிகளின் மூன்று ஆண் பிள்ளைகளான சண்முகம்பிள்ளை, பசுபதிப்பிள்ளை, சுவாமிநாதன்பிள்ளை ஆகியோர் மிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் செல்வச் செழிப்பின் பெருமைகளை வார்த்தைகளில் வடித்திட முடியாது. யாழ்ப்பாணம், தெல்லிப்பளை ஊரினை தாய் மண்ணாக கொண்டிருந்தாலும், வந்தாரை வாழ வைக்கும் எம் கோணமலை பூமி தன் மண்ணில் சிற்றம்பலம் ஐயாவின் மூன்று மகன்மாரையும் சிறப்புடன் வாழ வைத்திருந்தது. எண்ணிலடங்கா சொத்துக்களுடன் பெரு வாழ்வு வாழ்ந்திருந்தனர். இம்மூவரில் சீமான் சண்முகம்பிள்ளை அவர்கள் சமூக சேவைகளில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டார்.

இரக்க குணம் அதிகம் படைத்தவர். ஏழை, எளியோருக்கு தான, தருமங்கள் செய்து பலருக்கு வாழ்வளித்து வந்தார். இளைஞனாக இருந்த போதும் நற்தொண்டுகள் பல ஆற்றிவந்தார். சண்முகம்பிள்ளை ஐயா அவர்களும் சைவப் பண்பாட்டில் அக்கறை மிகுந்தவராகவே வளர்ந்திருந்தார்.

### இறையருள் நிறைந்த இல்லற இணையேற்பு

ஒருசமயம் ஐயா அவர்கள் தனது நண்பர்களுடன் தம்பலகாமத்தின் எல்லைப்புற வனப்பகுதியில் வேட்டைக்குச் சென்றிருந்தார். வேட்டைக்குச் சென்ற இடத்தில்தான் கோயில் ஒன்றில் தன் பெற்றோருடன் நின்றிருந்த அன்னையை தற்செயலாகக் காண நேரிட்டது. கண்ட மாத்திரத்தில் அன்னை மீது காதல் வயப்பட்டார்.

அக்காலக்கட்டத்தைப் பொறுத்தவரை காதல் திருமணம் என்பது பெரும் தண்டணைக்குரிய குற்றம் போலே தான் பார்க்கப்பட்டது. எவரும் அதனை தம் குடும்பங்களில் அனுமதிப்பதில்லை என்ற காலத்திலும் தங்கள் பிள்ளையின் காதலுக்கு மதிப்பளித்து இருவீட்டாரும் முழுமனதுடன் இரண்டு சம்மதம் தெரிவித்து இசைந்திருந்தனர்.

1883ம் ஆண்டு அன்னையின் இருபதாவது வயதில் இருவரதும் திருமணம் இனிதே கைகூடி மிகச்சிறப்பாக திருமண வைபவம் நடந்தேறியது.

### ஐயா சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை அவர்களின் பெயரில் பிறந்த திருமலை சண்முக வித்தியாலயம்

முப்பத்துநான்கு வருட இல்லற பந்தம். இருவரும் எதிர்கால சந்ததியினருக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே வாழ்ந்திருந்தனர். காலம் வேகமாக கடந்து சென்றது. கால ஓட்டத்தில் 1917ம் ஆண்டு திரு. சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை அவர்கள் இவ்வுலகை நீத்தார். குழந்தை பாக்கியம் இல்லாத அம்மையார், கணவரின் நினைவுகளைத் தன் உடலில் உயிரோட்டமென வாழத்தொடங்கினார். இமைப்பொழுதும் தன் கணவரின் நினைவுகளிலிருந்து விலக முடியவில்லை, தன் கணவர் தன்னுடன் வாழ்வதாகவே எண்ணம் கொண்டார். நினைவுகளின் தாக்கம் தன் கணவரின் எண்ணங்கள் உயிர் பெற வேண்டும் என்ற அவாவினை ஏற்படுத்தத் துவங்கியது.

தன் கணவரின் நிலையிலிருந்து அவர் முன்னெடுத்துச் செய்து வந்த எந்தவொரு செயற்பாடுகளும் தடைப்பட்டு விடாது முன்னெடுத்துச் செல்லத் தொடங்கினார். ஐயா செய்துவந்த தொண்டுகளுடன் சேர்த்து ஐயாவின் பெயரால் மேலும் பல தொண்டுகள் ஆரம்பிக்கப்பட்டன.

தனது ஐம்பத்துநான்கு வயதில் கணவனை இழந்து கைம்பெண்ணான அன்னையார் அக்கால கட்டுப்பாட்டு நெருப்பு வளையங்களிலிருந்து மாபெரும் சவால்களின் மத்தியிலேயே தம் சமூக சேவைகளைத் தொடர்ந்தார். தனக்கென பெண் வாரிசு ஒன்று இல்லாதிருந்த போதும் தன் உறவினர்களின் பிள்ளைகளுக்கு வளர்ப்புத் தாயாக இருந்து நல்வழி காட்டியிருந்தார்.

கல்வி ஒன்றின் மூலமே பெண்பிள்ளைகள் தம்மைக் காத்துக் கொள்ள முடியும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். கல்வியின் கருவிலே பெண் சத்தியின் பூரண வலிமை கொண்டு புதுமைப் பெண்களுக்கான உலகைப் படைத்தார். அவரின் நோக்கத்தின் மையமாய், ஐயா சண்முகம்பிள்ளை அவர்கள் நினைவாக 1923ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 20ம் திகதி (02-10-1923) 16 மாணவிகளுடன் திரு. திருமதி கைலாசப்பிள்ளை தம்பதியினரை ஆசிரியர்களாகக் கொண்டு சண்முக வித்தியாலயம் எனும் பாடசாலையை நிறுவினார் அன்னையார். அதுவே இன்று உயர்ந்து வளர்ந்து திருமலையின் அடையாளமாக சைவப் பெண்களின் தலைமைப் பள்ளியாக மிளிர்கிறது.

முப்பது ஆண்டுகள் வரை பாடசாலையை தன்னால் முடிந்தவரை வளர்ச்சிப் படிக்கட்டுக்களில் மேல் நோக்கி முன்னேறச் செய்தார். ஓர் தூய ஆன்மாவினால், புனிதமான நோக்கத்திற்காக, உயர்வான குறிக்கோளுடன் ஆரம்பிக் கப்பட்ட கல்விக் கூடத்தில் அந்தக் கலைவாணியின் உன்னதமான அருளாற்றல் மகிழ்வுடன் கொழிக்கின்றது.

வாழ்நாளில் பெரும் பகுதியைத் தன் சமூகத்தின் நலனுக்காகவே அர்ப்பணித்து, “இறைபணியே என் மூச்சு” என வாழ்ந்து, தன் பிறவிப்பயனை வாழும் போதே தொட்டு விட்ட நிலையில், 1953ம் ஆண்டு வைகாசித் திங்கள் 02ம் நாள் (02-05-1953) தனது தொன்னூறாவது வயதில் இயற்கை மூப்பினால் இவ்வுலகை நீத்தார்.

அன்னையின் இறுதிச் சடங்கு சண்முகம்பிள்ளை ஐயாவின் சகோதரர் சுவாமிநாதன்பிள்ளை அவர்களின் மகன் திரு. சுந்தரலிங்கம்பிள்ளை அவர்களினால் நிறைவேற்றப்பட்டது. மரணம் வரை அல்ல மரணத்தின் பின்னும் தனக்கான செயற்பாடுகளை முன்கூட்டியே ஒழுங்கு செய்து வைத்திருந்த மன உறுதி கொண்ட இரும்புப் பெண்மணி அன்னை. திருகோணமலையில் எத்தனை அளப்பரிய சேவைகளையும், தொண்டுகளையும் அம்மையார் ஆற்றியிருந்த போதும் அன்னையின் சிறப்பினைப் பறைசாற்றும், அவர் பெருமையை உரக்கச் சொல்லும் அடையாளமாய் அன்னை நிறுவிய “ஸ்ரீ



சண்முக வித்தியாலயம்” என்றும் அவர் பெருமை சொல்லும் கம்பீர உருவச்சிலையைத் தாங்கி நிற்கும்.


இந்த பாடசாலை மென்மேலும் வளர கோணமலைச் சமூகம் மட்டுமல்ல, இலங்கை சைவத்தமிழ் சமூகம் முன்னின்று உழைக்கவேண்டும். திருமலையின் சைவம் மற்றும் தமிழ் வளர்ச்சி பற்றி பேசும் ஒவ்வொருவரும் போடும் திருச்சிற்றம்பலம் எனும் முதன்மைக் குறி, ஐயா திரு. சிற்றம்பலம் சண்முகம்பிள்ளை அவர்களின் பெயரில் பிறந்த திருகோணமலை சண்முக வித்தியாலயதின் வளர்ச்சிக்கான படிகளே. இந்த ஆண்டு நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இந்த கல்லூரி, பல்லாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து சைவ விழுமியங்கள் மற்றும் பண்பாடுமிக்க பெண்பிள்ளைகளை உருவாக்க, தென்னாடு சிவமடத்தினர் ஆகிய நாங்களும் குரைகடல் ஓத நித்திலம் கொழித்தும், குடிதனை நெருங்கிப் பெருக்கம் ஆய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரையும், கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானையும் வேண்டி வணங்குகிறோம்.

திருச்சிற்றம்பலம்

# சிவக்கர சுவாமிகள் மற்றும் ஒளியரசு ஐயாவின் தென்னாட்டு நிகழ்வுகள்



திருக்கேதீச்சரத் திருத்தலப் பயணம்



தென்னாட்டில் ஐம்பதிற்கு மேலான அடியார்களிற்கு நுழைவு (சமய) தீக்கை




தென்னாட்டில் யோகர் சுவாமிகள் குருபூசை

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்

**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட**
**திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**



### மருணீக்கியார் 'திருநாவுக்கரசர்' நாமம் பெற்றது

சூலை நீங்கி புத்துயிர் பெற்ற மருணீக்கியார், பொய்யை மெய் என்று பெருக்கிய இழிந்த சமயமாய், நல்வினையற்ற இழிந்த சமணர் சார்ந்து நிற்கும் புறச் சமயமான ஆழமான படுகுழியில் விழுந்து, மேலே எழுகின்ற வழியறியாது, மயங்கிப் பயனற்ற தொழிலைச் செய்து வந்த யான், சிவபெருமானின் திருவடிகளை வந்து அடையும் இப்பெருவாழ்வினைப் பெறத்தந்த இச்சூலை நோய்க்குக் கைம்மாறாகச் செய்யக்கூடிய உதவி என்ன இருக்கின்றது? என அச்சூலை நோயை நினைந்து வணங்கினார்.

திருவீரட்டானத்து அமர்ந்திருக்கும் இறைவரின் திருவருளால், பாடற்கு இயைந்து அலர்ந்த செந்தமிழின் இனிய சொல்வளம் கொண்ட திருப்பதிக மாலையைப் பாடியருளிய முறையினால், ஹதிருநாவுக்கரசுஹ என்று உனது பெயர் பலரும் விரும்புமாறு ஏழு உலகங்களிலும் நிலைபெறுவதாகுக! என எல்லார்க்கும் வியப்பு உண்டாகுமாறு வானில் ஓர் ஒலி எழுந்தது. அன்று தொடக்கம் மருணீக்கியார் திருநாவுக்கரசர் என்ற திருப்பெயர் கொண்டே அழைக்கப்படலானார்.

வீரட்டானேசுவரரின் திருவருளை போற்றி திருவதிகையை அடியார் கூட்டம் நிரப்பியது. மறுபுரம் தங்கள் இயலாமையை எண்ணி சமணர்கள் வஞ்சனையுடன் வருந்தினார்கள். வஞ்சனை கொண்ட சமணர்கள் உண்மை அறிந்தால் மன்னன் கூட சைவத்தை தழுவி விடுவான் என்ற தீய எண்ணத்தால், பல்லவ மன்னனிடம் "சமணத்தை நிந்தனை செய்யும் பொருட்டு தருமசேனர் தமது தமக்கையாரிடத்தே சென்று சைவத்தை தழுவிக் கொண்டார்" என்று பொய்யுரைத்தனர். சமணர்களின் வஞ்சனையால் சினம் கொண்ட மன்னனும் அவரை பிடித்து தண்டிக்க எண்ணி, அத்தீயோனை பிடித்துவர ஆணையிட்டார்.

உடனே மந்திரிமார் சேனைகளோடு போய், திருவதிகையை அடைந்து திருநாவுக்கரசு நாயனாரிடத்தில் சென்று, "எங்கள் அரசன் இன்றைக்கு உம்மை அழைத்துக் கொண்டு வரும்படி எங்களை அனுப்பினான் வாரும்" என்றார்கள். அதுகேட்ட திருநாவுக்கரசுநாயனார்,

**"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை**
**தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான**
**சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்**
**கொய்ம்மலர்ச் சேவடிஇணையே குறுகினோமே."**

என்னும் மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடி, **"நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கடவேமல்லேம்"** என்றார்கள். அதுகேட்ட மந்திரிமார்கள் அவரை வணங்கி அழைக்க, **"அவர் அடியேனுக்கு வரும் அபாயங்களுக்கெல்லாம் சிவபெருமான் இருக்கின்றார்"** என்று போதற்கு உடன்பட்டார்.

அவர்கள் அழைத்துக் கொண்டு போய், அரசன் எதிரே நிறுத்தினார்கள். அரசன் நாவுக்கரசரை நோக்கி **"நீ எம் சமயத்தை நிந்தை செய்துள்ளாய் அதனால் உன்னை தண்டிக்க வேண்டும்"** என்று கூறி, பக்கத்திலிருந்த சமணர்களை நோக்கி **" இனி இவனுக்கு யாது செய்வோம்"** என்று கேட்க் சமணர்கள் **"நீற்றறையில் இடல் வேண்டும்"** என்றார்கள்.


### நாவுக்கரசரை நீற்றறையில் இடல்

வஞ்சனை கொண்ட தீஞ்சமணரின் கொடிய வார்த்தையின் வண்ணம், மன்னனும் நாவுக்கரசரை நீற்றறையில் அடைக்கப் பணித்தான். சினம் கொண்ட அம்மன்னன் கூறிய அளவில், உருகச் செய்யும் பெருந்தீயின் வெம்மையுடைய நீற்றறையினுள், பெருந்தகையாரை இருக்கச் செய்து, கதவை மூடி, இரும்புத் தாழிட்டுக் காவல் செய்து அமைத்தனர்.

ஆளுடைய அரசர் அந்நீற்றறையுள் சேர்ந்த போது, அம்பலத்தில் கூத்தியற்றும் இறைவனின் திருவடி நிழல் என்றும் குளிர்ச்சியை தரக்கூடியது என வேண்டி,

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கு இளவேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே."**

என்று திருப்பதிகம் பாடி, உறுதி கொண்ட மனத்தால் நேர் நோக்கி முதல்வனையே தொழுதவண்ணம் இருந்தார். திருவருளால் வெப்பத்தை உடைய அந்நீற்றறை இறைவரின்



திருவடி நீழலினது அருள் மயமாய்க் குளிர்ந்தது.

ஓர் ஏழு நாள்கள் கழிந்தபின்பு, நல்லுணர்வு இல்லாத அவ்வமணர்களைப் பல்லவ மன்னனும் அழைத்து, ஹஇனி நீங்கள் நீற்றறையைத் திறந்து பாருங்கள்ஹ எனப் பகன்றான். அரசன், சமணர் முதலியோர் தெளியும் அறிவு இல்லாதவராய் நீற்றறையைத் திறந்தனர். சிவானந்தப் பெருக்கினுள் மூழ்கி தெளிவடைந்து, எவ்வகையான குறைபாடும் இல்லாதவராய், மகிழ்வுடன் வீற்றிருந்த திருநாவுக்கரசரைப் பார்த்து, ஹகெடுதி சிறிதும் அடைந்திலது! என்ன வியப்பு!ஹ என்று சமணர் உரைத்தனர்.

### நாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தமை

இஃது அதிசயம் அன்று! முன்பு சமண் சமயத்தைச் சார்ந்திருந்த சார்பில் பெற்ற சாதகத்தால் இதைச் செய்து, இறவாது பிழைத்திருந்தான்ஹ என்று அரசனுக்குக் கூறி, இனி அறிவால் செய்யக் கடவது, கொடிய வலிய நஞ்சை இவனுக்கு ஊட்டுவதேயாகும்ஹ என்று மேன்மேலும் தீமைசெய்வதில் முதிர்ச்சியடையந்துள்ள அச்சமணர்கள் உரைத்தனர்.

அங்கு அதனைக் கேட்டதும், தீய சமண்சமயச் சார்பினால் கெடுகின்ற அரசனும், மிகப் பெரிய மயக்கத்தால் ஹநஞ்சை ஊட்டுங்கள்ஹ எனக் கூற, அதற்குச் சிறிதும் தயங்காத சமணர்கள், திருநாவுக்கரசரை அங்ஙனமே தீய நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணுமாறு செய்தனர்.

திருப்பாற்கடல் விடத்தினை கண்டத்தில் கொண்ட எம்பெருமானின் திருவருளால், நாவுக்கரசர் உண்ட நஞ்சும் அமுதமானது. இந்நிகழ்வை சேக்கிழார் பெருமகனார் மிக அழகாக எடுத்து இயம்புகின்றார்.

**"பொடியார்க்கும் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்**
**முடிவாக்கும் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்**
**படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய**
**அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ!"**

அந்நஞ்சை ஆளுடைய அரசர் உண்டும், அவர் முன்போலவே துன்பம் இன்றி இனிது இருக்கக், ஹகொடிய நஞ்சும் அமுதம் ஆயிற்றே! என்று சமணர் அச்சம் கொண்டவராகி, ஹஇங்கு இவன் சாதல் இன்றி உயிர் பிழைத்திருப்பானாயின், எமக்கெல்லாம் இறுதி நேர்ந்துவிடும்ஹ எனத்துணிந்து, மன்னனிடத்தே சென்று ஹநஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணச்செய்தும், நம் சமயத்தில் கொண்ட நஞ்சு நீக்கும் மந்திரத்தால், அதன்பயன் விளையாதவாறு தடுத்து விட்டான். அவன் இறக்கும் வகை இலதேல் எங்கள் உயிர்களும் உனது ஆட்சியும் அழியும்ஹ எனத் தீமையை விளைவிக்கும் வஞ்சகத் தொழிலின் வழியில் நின்ற அச்சமணர்கள் உரைத்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (73-108)**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு வண்டார்குழலியம்மை உடனுறை வட ஆரண்யேசுவரர் (தேவர் சிங்கப் பெருமாள்) திருக்கோயில் – திருவாலங்காடு

## ( தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 248 ஆவது திருக்கோயில் – திருவாலங்காடு )





**"செப்பரும் பெருமை அன்பால் திகழ்திரு ஆலங்காடாம்
நற்பதி தலையினாலே நடந்து புக்கு அடைந்தார் அன்றே."**

இறைவனின் திருக்கூத்தை என்றும் பெற்று நிற்கும் பதியாதலின், அதனைக் காலால் மிதிக்க அஞ்சி, காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து வந்து அடைந்த பெருமைக்குரிய பேருடைய திருக்கோயிலே, அருள்மிகு வண்டார்குழலியம்மை உடனுறை வட ஆரண்யேசுவரர் (தேவர் சிங்கப் பெருமாள்) திருக்கோயிலாகும். எம்பெருமான் திருநடனத்தை கண்டு, கரைக்கால் அம்மையாரால் ஹகொங்கை திரங்கிஹ எனத் தொடங்கும் மூத்த நற்பதிகம் பாடப்பெற்ற திருத்தலமாகும்.

**அமைவிடம்:** **திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு**

திருவாலங்காடு இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. தொண்டை நாட்டுத்தலம். திருவள்ளூர் - அரக்கோணம் பேருந்து வழியில் உள்ளது. காஞ்சியிலிருந்தும், அரக்கோணத்திலிருந்தும், திருவள்ளூரிலிருந்தும் இவ்வூர்க்குப் பேருந்துகள் உள்ளன.

**இறைவர் திருப்பெயர்:** **வடாரண்யேசுவரர், தேவர்சிங்கப் பெருமான், ஆலங்காட்டு அப்பர் இறைவியார் திருப்பெயர்: பிரம்மராளகாம்பாள், வண்டார்குழலி.**
**கோயில் மரம்:** **பலா மரம்**
**தீர்த்தம்:** **சென்றாடு தீர்த்தம் (செங்கச்ச உன்மத்ய மோக்ஷ புஷ்கரணி), முத்தி தீர்த்தம்**
**வழிபட்டோர்:** **கார்க்கோடகன், சுநந்த முனிவர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், காரைக்கால் அம்மையார், பரணதேவ நாயனார், பட்டினத்துப் பிள்ளையார், சேக்கிழார் முதலியோர்**
**பாமாலை:** **காரைக்காலம்மையார், சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேக்கிழார்.**

### திருவாலங்காட்டின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### காரைக்கால் அம்மையார் அருளிய திருப்பதிகம் (மூத்த திருப்பதிகம் )

**கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் வெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங் காடே** *(11-2)*

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்
டஞ்சும்பழையனூ ராலங்காட்டெம் அடிகளே.** *(1 - 45)*

### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

**முத்தா முத்தி தரவல்ல
முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ்
சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும்
பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன்
னடியார்க் கடியேன் ஆவேனே** *(7-52)*

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

**வெள்ளநீர்ச் சடையர் போலும் விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே யுருகி நின்றங் குகப்பவர்க் கன்பர் போலும்
கள்ளமே வினைக ளெல்லாங் கரிசறுத் திடுவர் போலும்
அள்ளலம் பழனை மேய வாலங்காட் டடிக ளாரே.***(4 - 68)*

**ஒன்றா வுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே** *(6-78)*

### திருத்தலச் சிறப்பு

காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்த இத்தலத்தைத் தமது காலால் மிதிக்க அஞ்சிய சம்பந்தர் ஊருக்கு வெளியில் ஒரிடத்தில் இறங்கி, அன்று இரவு துயிலும்போது, அவர் கனவில் வந்த ஆலங்காட்டப்பன் **"நம்மை அயர்த்தனையோ பாடுதற்கு"** என்று நினைவூட்ட அடுத்த நாள் தலத்துக்குள் சென்று கோயிலில் இறைவனை பதிகம்பாடி வணங்கிய பேறு பெற்ற தலமே திருவாலங்காடு. நடராசப்பெருமானின் ஊர்த்தவ தாண்டவத் தலமாகவும், ஐம்பெரும் சபைகளுள் இரத்தினசபையாகவும் சிறப்புற்று விளங்குகிறது இத்தலம்.

மிகப் பெரிய குளமாகிய முத்தி தீர்த்தக் கரையில் நடனமாடித் தோற்ற காளியின் உருவம் உள்ளது. அம்மனின் 51 சத்தி பீடங்களில் இது காளி சத்தி பீடம். இங்குள்ள நூற்றுக்கால் மண்டபத்தில், திருக்கோயில் சார்பில் சித்த வைத்திய சாலை உள்ளது. இரத்தின சபையில் பெரிய படிக இலிங்கமும், சிறிய மரகதலிங்கமும், திருமுறைபேழையும் உள்ளன. சுந்தரர் பதிகம் கல்வெட்டில் பதிக்கப்பட்டிருப்பதை, சபையை வலம் வரும்போது காணலாம். இரத்தின சபையின் விமானம் செப்புத் தகடு வேயப்பட்டு, ஐந்து கலசங்களுடன் விளங்குகிறது. கருவறை நல்ல கற்கட்டமைப்புடையது. சுற்றுவீதியில் அம்மை அருகில் அம்மையப்பர் அருட்காட்சி தருகின்றார்.

பழையனூருக்குச் செல்லும் வழியில், திருவாலங் காட்டிலிருந்து ஒரு கி.மீ இல், பழையனூர் வேளாளர்கள் எழுபதுபேர் தீப்பாய்ந்து செட்டிப்பிள்ளைக்குத் தந்த வாக்குறுதியைக் காத்த 'தீப்பாய்ந்த மண்டபம்' உள்ளது. இங்குள்ள தொட்டியின் உட்புறத்தில், யாகம் வளர்த்து இறங்குவதுபோல் இவர்கள் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. தீப்பாய்ந்த வேளாளர்களின் மரபில், பழையனூரில் தற்போதுள்ளவர்கள் நாடொறும் திருவாலங்காடு வந்து இறைவனை வணங்கிச் செல்லும் மரபை நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்றார்கள். தினமும் சேவைக்கு வந்து செல்லும் இவர்கள், இம்மரபை பிற்காலத்தோரும் அறியும் வகையில் **"கூழாண்டார் கோத்திரம் சதாசேர்வை"** என்று கல்லில் பொறித்து, அக்கல்லை, கோயிலின் முன் வாயிலில், உயர்ந்த படியைத் தாண்டியவுடன் முதற் படியாக வைத்துள்ளனர். இம்மரபினர் தம்மை 'கூழாண்டார்கோத்திரம்' அடையாளப்படுத்துகின்றனர். அதாவது தாங்கள் கூழ் உணவை உண்டு, விளைந்த நெல்லை இறைவனுக்கு படைப்பவர்கள் என்பது பொருளாம். இவர்கள் சிவப்பற்று நெஞ்சை நெகிழச் செய்கிறது.

### திருத்தல வரலாறு

சும்பன், நிசும்பன் என்ற இரு அசுரர்கள் ஆலமரங்கள் அதிகமாக உள்ள காட்டில் தங்கி தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் துன்பம் விளைவித்து வந்தனர். இதனால் பாதிப்படைந்தவர்கள் சிவ பார்வதியிடம் சென்று முறையிட்டனர். பார்வதி தேவி தன் பார்வையால் காளியை தோற்றுவித்து அரக்கர்களை அழித்து விட்டு, அவளையே ஆலங்காட்டிற்கு தலைவியாக்கினாள். அரக்கர்களை அழித்து அவர்களது இரத்தத்தை உண்ட காளி, பல கோர செயல்களை புரிந்தாள். இதனால் முஞ்சிகேச கார்க்கோடக முனிவரின் வேண்டுகோளுக்கிணங்க சிவன் கோர வடிவம் கொண்டு ஆலங்காட்டை அடைந்தார். அவரை கண்ட காளி, **"நீ என்னுடன் நடனமாடி வெற்றிபெற்றால் இந்த ஆலங்காட்டை ஆளலாம்"** என்றாள்.

சிவனும் காளியுடன் ஊர்த்துவ தாண்டவம் ஆடினார். அப்போது தன் காதில் இருந்த மணியை கீழே விழவைத்து, பின் அதை தன் இடக்கால் பெருவிரலால் எடுத்து மீண்டும் தன் காதில் பொருத்தினார்.இதைக்கண்ட காளி, இது போன்ற தாண்டவம் தன்னால் ஆட இயலாது என தோற்று விடுகிறாள். அப்போது காளியின் முன் இறைவன் தோன்றி, **"என்னையன்றி உனக்கு சமமானவர் வேறு யாரும் கிடையாது. எனவே இத்தலத்தில் என்னை வழிபாடு செய்ய வருபவர்கள், முதலில் உன்னை வழிபாடு செய்த பின் என்னை வழிபட்டால் தான் முழு பலன் கிடைக்கும்"** என்று வரமளித்தார். அன்றிலிருந்து காளி தனி கோயில் கொண்டு அருள் கொடுக்கிறார்.

### திருக்கோயில் அமைப்பு

கோயிலின் முன்னால் பதினாறுகால் மண்டபம் உள்ளது. முகப்பு வாயிலில் வரசித்தி விநாயகரும், ஊர்த்துவ தாண்டவமும், நந்திவாகனரும், முருகனும், காளியும் உள்ள சுதை சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. உள் நுழைந்தால் நான்குகால் மண்டபம் உள்ளது. உள்கோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே நுழைந்தவுடன் வலப்பால் சித்த வைத்திய சாலை நடைபெறும் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. இம் மருத்துவச்சாலை திருக்கோயில் சார்பில் நடைபெறுகிறது. திங்கள், வியாழன் காலை வேளைகளில் மக்கள் வந்து மருத்துவம் பெற்றுச் செல்கின்றனர். இம் மண்டபத்தில் தான் நடராசர் திருமஞ்சனம் நடைபெறுகிறது.

கோபுர வாயிலில் வல்லபை விநயாகர் துதிக்கையுள்ளிட்ட பதினோரு கரங்களுடன் காட்சி தருகின்றார். மறுபுறம் வள்ளி தெய்வானையுடனாகிய ஆறுமுகர் சந்நிதி. வெளி வீதியில் சந்நிதி ஏதுமில்லை. சந்தன மரங்கள் உள்ளன. கோபுரவாயில் நுழைந்ததும் செப்புக் கவசமிட்ட கொடிமரம் உள்ளது. வலப்பால் கொடியேற்ற மண்டபம், இடப்பால் சுக்கிரவார மண்டபம். அடுத்துள்ள மூன்று நிலைகளையுடைய உள் கோபுரத்தில் ஊர்த்தவ தாண்டவம், நான்முகன், நந்தி மத்தளம் வாசித்தல், காரைக்காலம்மையார் பாடுதல், இடபவாகனர், காரைக்காலம்மையார் வரலாறு முதலியவை சுதையில் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

வலப்பால் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. உள்ளே நுழைந்தால் எதிரில் மதிற்சுவர்மீது ஐம்பெரும் சபைகள் உரிய நடராச தாண்டவத்துடன் வண்ணத்தில் சுதை சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. கோபுரத்தில் உள் பக்கத்தில் பதின்மை அற்புத சிற்பங்கள், கண்ணப்பர் கண்ணை அப்புவது, அரிவாட்டாய நாயனார் மனைவியுடன் செல்வது, முதலிய சிற்பங்கள் உள்ளன. வீதியில் வலமாக வரும்போது ஆதிரைத் திருமஞ்சன மண்டபம் இரத்தினசபை வாயில் உள்ளது. சபைக்கு எதிரில் நிலைக்கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. வலமாக வரும்போது ஆலங்காடு என்னும் பெயருக்கு ஏற்ப மூலையில் பெரிய ஆலமரம் உள்ளது.

அடுத்து அம்பாள் சந்நிதி நின்ற திருக்கோலமாக தெற்கு நோக்கி உள்ளது. சிற்பக் கழையழகு வாய்ந்த கல்தூண்கள் காண அழகுடையவை. எழுந்தருளித் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டள்ளன. அவற்றுள் பிட்சாடனர், விநாயகர், காரைக்காலம்மையார் (தாளமிட்டுப் பாடும் அமைப்பில்) சுநந்த முனிவர், கார்க்கோடகன், நால்வர் முதலியவை சிறப்பானவை.

பங்குனி உத்திரத்தன்றும், மார்கழித் திருவாதிரையன்றும் ஊர்த்துவதாண்டமுர்த்தி ஆண்டுக்கு இருமுறை திருவீதி எழுந்தருளி பழையனுர் சென்று வருகிறார். கல்வெட்டில் நடராசப்பெருமானின் பெயர் "அரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனார்" என்று குறிக்கப்பட்டுள்ளது

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## சிவகாமி அம்மை உடனுறை பொன்னம்பலவாணேச்சரர் திருக்கோயில் - பொன்னம்பலவாணேச்சரம்

**குன்றேயுநல் கொழும்பு நகர்**
**குலவுங் கொச்சிக் கடையில்**
**நன்றேயுயர் திருக்கோயிலில்**
**நாளும் வீற்றே யிருக்கும்**
**அன்றேபுர மெரித்தான் பொன்னம்**
**பல வர்ணனைத் தொழுதால்**
**சென்றே விடும் உமது வினை**
**சேர்ந்தே பயன் பெறுவீர்**

கலாபூஷணம் வை. க. சிற்றம்பலம் அவர்கள் பாடிய பொன்னம்பலவாணேச்சரத்தின் பாடலில் தலத்தின் அமைவிடம் பற்றிச் சிறப்பாகப் பாடியருளியுள்ளார். கொழும்பு மாநகரில் கொச்சிக்கடைப் பகுதியில் அமைந்துள்ளது. இச் சிவத்தலம் கொழும்பு நகரில் கட்டடக் கலையிலும் அதன் வனப்பிலும் சரித்திரப் பிரசித்தி பெற்ற சிவன் கோயிலாக கம்பீரத்துடன் அமைந்துள்ளது.

### திருத்தல வரலாறு

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு செட்டியார் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சைவக் கொடையாளி அருணாசலம் பொன்னம்பல முதலியார் என்பவரால் 1856ஆம் ஆண்டு இக் கோயில் உருவாக்கப்பட்டது. அவர் வாழ்ந்த காலச் சூழலில் கொழும்புச் சைவமக்கள் சைவத்திற்கு அப்பாற்பட்ட சிறு தெய்வங்களுக்கு சிறு கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்த நிலையில், இங்குள்ள மக்கள் சைவ முறை சார்ந்த சிவன் கோயில் ஒன்றை அமைத்து வழிபடுவதற்கு முதலியார் எண்ணம் கொண்டிருந்தார். அவரின் எண்ணப்படி சிவன் கோயில் நிறுவுதற்குரிய கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்கு சிவனார் அவரின் கனவில் அருள் நல்கினார். இதனை இறை வாக்கு எனக் கருதிய முதலியார் கொழும்பு நகரத்தில் ஒரு சிவன் கோயிலை எழுப்புவதற்கு, கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணியை கப்பரின் யோன் பவுல் ஸ்ரோன் என்னும் ஆங்கிலேயரிடம் விலைக்கு வாங்கித், தென்னிந்தியக் கோயிலுக்கு நிகரான கட்டட முறையில் சிற்ப நூல்களின் விதிக்கு அமைய சிவன் கோயில் அமைய வேண்டும் என்ற பேரவாவால் தென்னிந்திய கட்டமைப்பாளர்களையும் சிற்பிகளையும் வரவழைத்து இரண்டு வருடங்களாக உழைத்து சிவன் கோயிலைக் கட்டி முடித்தார். கருவறையில் 22 அங்குல உயரம் உடைய பெரு இலிங்கத்தையும், போக சத்தியையும் நிலைநிறுத்தினார். அதன் இடது பக்கத்தில் அம்மனுக்கும் ஓர் கோயிலை நிறுவினார். அதன் பின்பு 1857 ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்து பொது மக்கள் வழிபாட்டிற்குத் திறந்து வைத்தார்.

முதலியாரின் மறைவிற்குப் பின்னர் இவரின் மூத்த மகனான பொன்.குமாரசுவாமி அவர்கள் 1905 ஆம் ஆண்டு வரை திருக்கோயிலைப் பராமரித்து வந்தார். அவர் காலமானதும் அவரது இரண்டாவது மகன் சேர். பொன்.இராமநாதன் அவர்களால் நிர்வாகப் பொறுப்பு கையேற்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தென்னிந்திய சிவத்தலங்களுக்குச் தலப்பயணம் சென்ற இராமநாதன் அவர்கள் சோழர், நாயக்கர் கலைப் பாணியில் முற்றிலும், கருங்கற்களைக் கொண்டு கற்றளிப் பாணியில் பாட்டனார் கட்டிய சிவன் கோயிலைப் புதுப்பிக்க திருவுளங் கொண்டார். இதற்காக தென்னிந்தியாவிலிருந்து கட்டடக் கலைஞர்களையும் சிற்பிகளையும் வரவழைத்து கோயிற் திருப்பணிகளை ஆரம்பித்தார்.

1907ஆம் ஆண்டு வியாங் கொடையிலிருந்து கருங்கற்களைக் கொண்டு வந்து கோயிற் திருப்பணிகளைப் புரியும் போது தானும் தொழிலாளர்களோடு தொழிலாளியாக கலந்து ஊழியம் செய்ததோடு, சிற்பிகளுக்கு அருகில் இருந்து தமிழில் தேவாரங்களை பண்ணிசையோடு பத்தியுடன் பாடினார் மற்றும் கோயில் திருப்பணிகள் எல்லாவற்றையும் தானே மேற்பார்வையாளராக இருந்தும் கண்காணித்தார். 1912 ஆம் ஆண்டில் சகல திருப்பணி வேலைகளும் நிறைவு பெற்றதன் பின்னர், அதே ஆண்டு குடமுழுக்கும் செய்வித்தார்.

### மூர்த்தி தலத் தீர்த்தச் சிறப்பு

மூலவராக பொன்னம்பலவாணேச்சரர் மற்றும் போகசத்தியாக சிவகாமி அம்மையும் எழுந்தருளி உறைகின்றனர். தில்லையம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனை பொன்னம்பலத்தான் என்று போற்றுவர். அதனால் தில்லைக் கோயிலை பொன்னம்பலம் என்றும் சிறப்பாகப் போற்றுவர். கொழும்பில் எழுந்தருளியிருக்கும் சிவனார் தில்லையம்பலவாணனின் பெயரைக் கொண்டும் இராமநாதனின் தந்தையின் பெயரைக் கொண்டும்



சூட்டப்பட்டு பொன்னம்பலவாணேச்சரர் என்று போற்றப்படுகின்றார். இங்குள்ள தீர்த்தம் சுவர்ண புஷ்கரணி தடாகமமும், தல மரம் மாதுளையும் ஆகும்.

இங்குள்ள மூர்த்தியின் அருளாற்றலை கலாபூஷணம் வை. க. சிற்றம்பலம் அவர்கள் பின்வருமாறு பாடிக்களித்துள்ளார்.

**“சீர் சேரடி யார்களேத்தி**
**சிவநாமங்கள் கூற**
**பேராம் பெரு வரங்கள் நல்கி**
**பெரிதும் மகிழ்ந்திருப்பான்…”**

**“நினைப்பா ருக்கும் நினையா தார்க்கும்**
**நிரலே தானும் தினமும்**
**சுனைப்பால் வரு நீரே யெனத்**
**தானே மருள் புரிவாள்.”**

### கோயில் அமைப்பும் - படிமங்களும்

கோயில் முழுவதும் சிற்பநூல் விதிகளின் முறைப்படி அமைந்துள்ளது. இறையகம், அதன் முன்னால் முன் மண்டபம் (அர்த்த மண்டபம்) அதன் முன்னால் பெரு மண்டபமும் அமைந்துள்ளது. பெரு மண்டபத்திற்கு முன்னால் நந்தி பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்துள்ளன. ஆலயத்தைச் சுற்றி கருங்கற் சுவர்கள் எழுப்பப்பட்டு அதன் பெருவாசலில் ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது. இது 65 அடி உயரமுடையது. இதே போல் அம்மனின் தெற்கு வாசலிலும் 35 அடி உயரமுடைய மூன்று தளங்களைக் கொண்ட கோபுரம் அமைந்துள்ளது. கோபுரங்களில் புராணக் கதைகளோடு தொடர்புடைய சிவ ஆடல் வடிவங்களும், மகேசுவர வடிவங்களும், சிவனடியார் வடிவங்களும், முனிவர்கள் மிருகங்கள், பறவைகள் போன்றவைகளின் உருவங்களும் கண்கவர் சிற்பங்களாக, வனப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இராச கோபுரத்தைத் தாண்டி முன்பக்கம் முன்னுள்ள வீதியில் 12 இராசிகளும், சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. வடமேற்கு கற்தூண் ஒன்றில் 18 தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சிற்பக்கவி சக்கர வடிவத்துள்ளும் அமைந்துள்ளன.

பொன்னம்பலவாணேச்சரரின் கோயில் உட் வீதியில் பிள்ளையார், கந்தன், திருமால், ஐம்பெரும்லிங்கம், சோமா சுகந்தன், ஞான வைரவர், தங்க வைரவர், ஒன்பான்கோள்கள் (நவக்கிரகங்கள்), சனிக்கடவுள் ஆகியோருக்கு தனித்தனி கோயில்களும் உள்ளன.





சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

### பூசைகளும் விழாக்களும்

இங்கு தினங்கள் தோறும் ஆறுகாலப் பூசை இடம் பெற்று வருகின்றது. சிறப்பாக தினமும் காலையும் மாலையும் வேள்வி வளர்க்கப்பட்டு நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றது. இப்பூசையின் போது சிறிய தேரில் இறைவனும் இறைவியும் உலா வருவார்கள். இங்கு அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடல்களுடன் பூசைகள் ஆரம்பமாகி தினப்பூசைகளின் போது நவசந்திப் பண்களில் அமைந்த திருமுறைப் பாடல்களும் ஓதப்பட்டு வருகின்றன.

இக் கோயிலில் திங்கள்தோறும் பல திருவிழாக்கள் சிறப்புற நடைபெற்று வருகின்றது மணவாளக் கோலத் தினமான தைப்பூசம் அன்று இறைவன், இறைவி ஆகியோருக்கு தனித்தனி 1008 சங்குகளால் நீராட்டும் மாலையில் அப்பன் அம்மைக்கு திருவிழாவும் நடைபெறும். மாசித் திங்களில் வரும் சிவனிரவு, நடேசர் பெருமானின் திருநீராட்டுப்பூசையில் ஆதிரைத் திருவிழா, சிறப்பு வாய்ந்த திங்கள்தோறும் வரும் பூசைகளாக நடைபெற்று வருகின்றது. இக் கோயிலில் வருடாந்த பெருந்திருவிழா பங்குனி உத்தரத்தில் நிறைவுபெற்று தீர்த்தத் திருவிழா வரக்கூடியதாக 10 நாட்கள் கிரியைகள் நடைபெற்று, தமிழில் தேவாரம் ஓதுதல், வாழ்த்துக் கூறுதல், என்பனவும் நடைபெறும். தேர்த்திருவிழா அன்று சோமசுகந்தர், அம்பாள், சண்டேசுவரர் ஆகியோர் அழகிய சிற்பத்தேர்களிலும் பிள்ளையார், முருகன் ஆகியோர் தம் வாகனத்திலும் வலம் வருவார்.

### சமய சமூகப் பணிகள்

அருணாசலம் பொன்னம்பலம் முதலியார் செல்வந்தரும், சிவப்பற்றாளராகவும் இருந்தமையால் தென்னாட்டில் சோழர்கள் சிவன் கோயிலைக்கட்டி, கோயில்களினூடாக எப்படிச் சமய சமுதாயப் பணிகளைப் புரிந்தார்களோ முதலியாரும், அவரின் பரம்பரையில் வந்தோரும் பொன்னம்பலவாணேச்சரர் கோயிலை முன்னிருத்தி பல சமய சமூகத் தொண்டுகளை ஆற்றி எல்லா சைவக் கோயில்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகின்றனர்.

கோயிலின் பூசைகளும், விழாக்களும் எவ்வித தங்கு தடைகளின்றி செவ்வனே நடைபெறுவதற்கு நாத்தாண்டியாவில் ஆயிரம் ஏக்கர் தென்னந்தோட்டத்தையும், கொழும்பு நகரில் தொடர் அங்காடிகளையும் கட்டி அவற்றிலிருந்து பெறப்படும் செல்வங்களை கோயில் பராமரிப்புக்குப் பயன்படுத்தினர். சைவர்களின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு ஒரு மயானத்தை அமைத்துக் கொடுத்து, அங்கு ஒரு மடமும் அமைத்து பூசகர்களைக் கொண்டு பிதிர்கடன் பூசைகள் புரிதவதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

ஏழை எளியவர்கள் தங்கி உணவு உண்பதற்கும் அன்னதான மடம் ஒன்று நிறுவப்பட்டு செயற்பட்டு வருகின்றது. கோயிலினுள் கோ சாலையும் அமைக்கப்பட்டு உள்ளது. மற்றும் வேதப்பாடசாலையும், அறநெறிப் பாடசாலையும் கோயில் நிர்வாக மேற்பார்வையில் இயங்கி வருகின்றது. ஓதுவார் மூர்த்தியைக் கொண்டு திருக்கோயில் மண்டபத்தினுள் பன்னிரு திருமுறை ஓதலும் நடைபெற்று வருகின்றது.

கொழும்பு நகரில் சைவசமயத்தின் கலங்கரை விளக்காக ஒளி ஊட்டி நிற்கும் கருங்கல் கட்டுமானத்தில் புகழ்பூத்த கோயில் பொன்னம்பலவாணேச்சரர் கோயிலாகும். இன மத பேதமின்றி அனைவரும் சிவனைப் பூசிக்கும் இடமாகவும், கட்டடக் கலையின் சிறப்பைப் பார்க்க வரும் அன்பர்களும், அடியார்களுக்கும் அருள் சுரக்கும் திருத்தலமாகவும் புகழ்பூத்து விளங்குகின்றது.

**“பொன்னோ டுயர் முத்தும் மணி**
**பொலிந்திலங்கும் கொழும்பின்**
**மன்னும் பெரு மாடவீதி**
**மணிக் கோபுரக் கோயில்**
**மின்னும் மிடை மடவாளொடு**
**மேவிப் பொன்னம்பலவன்**
**அன்னேயெனும் அடியார்க் கெல்லாம்**
**அருளியிருப் பானே”**

**“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



(07-03-2023) - மங்களநாதர் திருக்கோயில் சிறப்பு திருமஞ்சன வழிபாடு



(07-03-2023) - கொக்குவில் இந்துக் கல்லூரி திருக்கோயில் அடிக்கல் நாட்டல்




(07-03-2023) - மாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும்





(04-03-2023) - மாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடு



(24-03-2023) - செல்லப்பா சுவாமிகள் குருபூசை

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து ஒன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 22ம் நாள் நிறைமதி அன்று (05-04-2023 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org